# திராவிடநாடு

3—9—61 | வார வெளியீடு | விலை 16 காசு


## மகிழ்ந்திடுவாய்!

—[ எஸ். எம். காசிம் ]—

பழமையில் அமிழ்ந்துநற் பண்பிழந்தார்
புதுமையினை வெறுத்தொதுக்கி னார்; பழைய
வழமையென வளமற்ற நிலமாக்கி
வாழ்க்கையினைப் பாழாக்கி வகையிழந்து,
கொழுஞ்செல்வர் கொடுமைக்கா ளாகுகின்றார்,
கோல்கொண்டோர் தாக்குகின்றார் கோரமது!
தழலெனவே கொதித்தெழுவாய்! தனியாட்சி
தழைத்திடவே பணி புரிவாய்; மகிழ்ந்திடுவாய்!

ஆளவந்த கட்சியினர் ஆளுகின்றார்
அடிமையில் மூழ்கினோம் அறியாமையால்
மாளவந்த மக்களென்றே எண்ணி நம்மை
மாய்க்கின்றார் மனிதப்பண் பேதுமின்றி!
தாள்பணிந்து கிடப்பதுதான் தகுதி யேயோ?
தளை நீக்கித் தமிழ்முரசு கொட்டிடுவாய்
மாளுந்தொழி லாளர்தம் வாழ்வுதனை
மலர்ச்சியுறச் செய்திடுவாய்; மகிழ்ந்திடுவாய்!

வாழ்வளிக்க வழியில்லை; ஆள்வோருக்கு
வறுமையினை ஓட்டிடவோ நாட்டமில்லை;
தாழ்வுற்ற மக்கட்குக் கல்விதன்னைத்
தகுதியாய் வழங்கிடவும் நாட்டமில்லை,
தாழ்வற்ற சமுதாயஞ் சமைத்து இத்
தரணியில் தலைநிமிர்ந்து வாழ்ந்திடுவாய்!
வீழ்ச்சியுற்ற திராவிடர் எழுச்சிபெற
வேண்டியவை ஆற்றிடுவாய்; மகிழ்ந்திடுவாய்!

# அரசியல் வரலாறு

பெஸ்கி முகம்மது, எம். ஏ.,

சென்ற இதழ் தொடர்ச்சி...

### லாக்:

(1632—1704) இங்கிலாந்தில் 1688-ம் ஆண்டு இரத்தம் சிந்தாத ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது. நாட்டை ஆண்டுவந்த மன்னன் ஜேம்ஸ் II மக்களுக்கு விரோதமாக ஆட்சிபுரிந்த காரணத்தால், சர்வாதிகாரப் பாதையில் நடந்து சென்ற காரணத்தால், மக்கள் கொதித்தெழுந்து ஜேம்ஸை விரட்டிவிட்டு அவனுக்குப்பதில் வில்லியம் என்பவனை அரியணையில்அமர்த்தினார்கள். இந்தப் புரட்சியைஆதரித்துஆங்கில நாட்டு லாக் தனது சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை (1690) விளக்குகிறார். அரசாங்கம் தோன்றுவதற்கு முன் மனிதன் அமைதியின்றி, ஒருவருக்கொருவர் விரோதம் பூண்டு பூசலுக்குட்பட்டு வாழ்ந்தனர் என்றார் ஹாப்ஸ். ஆனால், லாக் அரசாங்கம் தோன்றுவதற்கு முன் மனிதன், ஹாப்ஸ் கூறியதுபோல் அத்துணை விரோதம் கொண்டு போட்டி பொறாமையுடன் வாழவில்லை. மாறாக இயற்கைச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டுச்சுதந்திரமாகசமத்துவத்துடன் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தான். இருந்தும் மனிதனுடைய உரிமைகள் எந்த நிமிடத்திலும்பறிபோய்விடுமே என்ற ஒரு அச்சம் பொருந்திய சூழ்நிலை இருந்துவந்தது. இதைப் போக்குவதற்காகத் தனி மனிதன் ஒவ்வொருவனுடனும் ஒரு பலமான அரசாங்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்று ஒப்பந்தம் செய்துகொண்டான். ஒவ்வொரு மனிதனும் தனது சகல உரிமைகளையும் சமுதாயத்தினிடம் ஒப்படைத்துவிடவேண்டும். சமுதாய ஒப்பந்தத்தின்மூலம் சகல அதிகாரங்களும் உரிமைகளும் அரசாங்கத்திடம், அதாவது மன்னனிடம் ஒப்படைக்கவேண்டும் என்று ஹாப்ஸ் கூறினார். ஆனால், இந்த அதிகாரங்களும் உரிமைகளும் சமுதாயத்திடம் ஒப்படைக்கவேண்டும். அரசாங்கத்திடம் ஒப்படைக்கக் கூடாது என்றார் லாக். ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்ட அரசாங்கம், அது மக்களாட்சியோ, மன்னராட்சியோ,சமுதாயத்தின் உரிமைகளைச் சரியான முறையில் பாதுகாக்கத் தவறிவிட்டால்,அந்தஅரசாங்கத்தை மாற்றி வேறு அரசாங்கத்தை ஏற்படுத்தச் சமுதாயத்திற்கு உரிமை உண்டு என்று லாக் கூறுகிறார். ஒப்பந்தத்திற்கு பிறகு மன்னன் சர்வாதிகாரி; மக்களுக்கு ஏதும் இல்லை. மன்னன் வழி நடக்கவேண்டும் என்றார் ஹாப்ஸ். ஒப்பந்தத்திற்குப் பின் ஏற்பட்ட மன்னராட்சி அரசாங்கத்தில்,மன்னர் மக்களுக்கு விரோதமாக யதேச்சதிகார போக்கில் நடந்தால், அவனை விரட்டி அடித்து வேறு மன்னனை ஆட்சிப் பீடத்தில்அமர்த்தச்சமுதாயத்திற்கு, அதாவது மக்களுக்கு உரிமை உண்டு என்று கூறி மன்னராட்சி அதிகாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறார் லாக். சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை விளக்குகையில் ஹாப்ஸ் மன்னனின் சர்வாதிகாரத்தை ஆதரிப்பவருமாக (Absolute Monarchy) லாக் வரம்பிற்குட்பட்ட மன்னராட்சியை (Limited Monarchy) ஆதரிப்பவருமாக காட்சியளிக்கிறார்கள். இனி ரூசோவின் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை ஆராய்வோம்.

### ஜின் ஜேக்குயிஸ் ரூசோ:

(1712—1778) 1762-ம் ஆண்டு வெளியிட்ட தனது 'சமுதாய ஒப்பந்தம்' (Contract Social) என்ற நூலில் ரூசோ தனது சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டைத் தெளிவுபடுத்துகிறான். ஹாப்ஸ், லாக், போன்று ரூசோவும் ஒரு தனி அரசியல்அமைப்பைவிரும்புகிறார். சர்வாதிகாரத்தை ஆதரித்த ஹாப்ஸுக்கு எதிராகச் சர்வாதிகாரஅரசாங்கத்தை எதிர்க்கும் மக்கள் சக்திக்கு, மக்கள் உரிமைக்கு ஆதரவு தருகிறார். "மக்கள் குரலே மகேசன் குரல்" என்ற கருத்தைத் தெளிவுபடுத்தியவர் ரூசோ. பிரான்ஸ்நாட்டில் மன்னர் ஆட்சியின்கீழ் மக்கள் பட்ட அவதியைக் கண்ணால்கண்டவர் ரூசோ. ஏழை மக்கள் எந்த எந்த முறைகளில் பிரபுக்களும் ஆளும் வர்க்கத்தினரும் நசுக்கி அடக்கி ஒடுக்கினர் என்பதை உடனிருந்து உணர்ந்தவர் ரூசோ. 'நாடா, அது? நான் தானே' என்று ஆணவக் குரல் எழுப்பிய பிரெஞ்சு மன்னன் 14-ம் லூயி சர்வாதிகாரத்தைக் கேட்டு கொதித்தெழுந்தவர் ரூசோ. மக்கள் நாயினும் கேடாக உணவிற்கு ரொட்டியின்றி, உடலுக்குத் துணியின்றி, இருக்க இடமின்றி ஏழடுக்கு மாளிகைகளின் ஓரத்தில் வாயில்லா உயிர்கள்போன்று ஒதுங்கியதைக் கண்டவர் ரூசோ. பலர் உழைப்பில் சிலர் வாழும் இந்தத்தத்துவத்திற்குச் சாவுமணி அடிக்கத் தன்னுடைய "சமுதாய ஒப்பந்தத்தில்" மக்கள் குரலுக்கு ஆதரவாகப் பரணி பாடுகிறார். ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கவேண்டிய உரிமை, எத்தகைய அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும் என்கிற உரிமை, அந்த அரசாங்கம் செவ்வனே நடைபெற தவறினால், அதை மாற்றவேண்டிய உரிமை, ஆகிய எல்லா உரிமைகளும் மக்களிடமே இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். ரூசோ. ஏன் அந்த உரிமை மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறதென்றால், அந்த அரசாங்கத்தை உருவாக்கவேண்டும் என்று தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டது அந்த மக்கள். ஆகவே, சகல உரிமைகளையும் உடைய மக்கள் எதையும் மாற்றுவதற்கும் உரிமை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எவ்

(4-ம் பக்கம் பார்க்க)

# வெறும் பேச்சலங்காரம்!

மலர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (3—9—61) தனிப்பிரதி 16 காசு [ இதழ்

தகர்த்தெறிந்துவிட்டாராம்! தி. மு. க-வின் குற்றச் சாட்டை டில்லி அமைச்சர் கோபாலரெட்டியார் தகர்த் தெறிந்துவிட்டார் என்ற தலைப்புகளோடு செய்தித்தாள் கள் வெளிவந்துள்ளன.

தென்னாடு டில்லி அரசால் புறக்கணிக்கப்படுகிற தென்று தி. மு. கழகம் சுமத்தும் குற்றச்சாட்டை அமைச்சர், தக்க காரணகாரியங்களை எடுத்துக்காட்டு வதன்மூலம் தகர்த்தெறிந்துவிட்டாராம்.

அவர் அமைச்சர், எனவே, அவருக்கு எதிர்க்கட்சி களின் குற்றச்சாட்டுகளை மறுப்பதிலும், தகர்த்தெறி வதிலும் ஒரு தனி வாய்ப்பைப் பெற்றுவிடுகிறார்.

சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையான வையா, நியாயமானவையா என்பதுபற்றி அமைச்சர் ஏன் ஆராய்ந்து பார்க்கப்போகிறார்? அவருடையவேலை யும் அதுவல்லவே!

அவர், ஒரு அரசின் அமைச்சர், எனவே, அரசு செய்கின்ற எந்தக் காரியத்தையும் தவறு—தகாது— நியாயமற்றது — ஓரவஞ்சனையானது என்று வெளிப் படையாகக் கூறக்கூடாதல்லவா!

எனவேதான், தகர்த்தெறிகிறார். அங்ஙனம் செய் வது அவருக்கென்று உள்ள கடமைகளில் ஒன்று என்று அவர் கருதுகிறார்.

தென்னாடு புறக்கணிக்கப்படுகிறதா? இல்லவே இல்லை! தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை. இதோ அதற்கான காரணகாரிய விளக்கங்கள் என்று ஏதேதோ கூறுகிறார்.

பாம்பேக்கு அடுத்தபடியாக வளம்நிறைந்த மாநில மாக விளங்குவது தமிழ்நாடு ஒன்றுதான் என்று கூறு கிறார்.

உத்தரப்பிரதேசம் 6-கோடி வருமான வரி செலுத் தினால், தமிழ்நாடு 18-கோடி வருமானவரி செலுத்து கிறது என்று மேற்கோள் எடுத்துக்காட்டி, எனவே, தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை என்று கோபால ரெட்டியார் கூறுகிறார்.

தமிழ்நாடு 18-கோடி வருமானவரி செலுத்துமள வுக்கு வற்றாத வளமும் செல்வமும் பெற்றிருக்கிற தென்று கூறிப் பெருமிதம்கொள்கிறார்.

இந்தப் பதினெட்டுக்கோடி ரூபாய் வருமானவரி யைத் தமிழ்நாட்டிலுள்ள மக்கட்தொகையில் எத்தனை பேர் செலுத்துகிறார்கள்? வருமானவரி செலுத்தும் வாய்ப்பிழந்து நிற்கும் மக்கட்தொகை எவ்வளவு?

அன்றாடக் கஞ்சிக்கு அவதிப்படும் தமிழ் மக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

நிலமற்றோர் எத்தனைபேர்?

குடியிருக்க வீடற்றோர் எவ்வளவு தொகையினர்?

வேலையற்று வீதிவீதியாகத் திரிவோரின் தொகை எவ்வளவு?

18-கோடி ரூபாயை வருமான வரியாகச் செலுத் தும் வாய்ப்பினைப் பெற்றுள்ள தமிழ்நாட்டிலிருந்து வேலைதேடி வெளிநாடுகள் சென்று அவதியுறும் மக் களின் தொகை ஆயிரமா? இலட்சமா? பல இலட்சமா? கணக்குத் தெரியுமே, அவருக்கு—அவர் அமைச்சராக இருப்பதால்.

தமிழ்நாடு அமைச்சரவையில் அவர் நிதியமைச்ச ராகக்கூட இருந்திருக்கிறாரே!

எனவே, அவருக்கு இந்தப் புள்ளிவிபரங்கள் எல் லாம் தெரியாமல் இருக்க நியாயமில்லையே!

இலங்கையிலும், மலேயாவிலும், பர்மாவிலும், தென்னாபிரிக்காவிலும், அந்தமானிலும், பிஜித்தீவிலும், வடநாட்டிலும் இன்னும் இவைபோன்ற பற்பல நாடு களிலும் பிழைக்க வழிதேடிப் போய்ப் பிச்சையெடுக் கும் நிலைக்கு ஆளாகியுள்ள தமிழ் மக்களின் தொகை எவ்வளவு என்று கணக்கெடுத்துப் பார்க்கவேண்டு மென்ற கவனமாவது நமது மதிப்பிற்குரிய மந்திரியா ருக்கு ஏற்பட்டதா என்பது சந்தேகம்தான்.

ஏனென்றால், இவ்வளவு அவதிகளுக்கும் ஆளாகும் நிலையினைப் பெற்றுள்ள தமிழ்மக்களைத் தனக்குரியவர் களாக்கிக்கொண்டுள்ள தமிழ்நாடுதான் 18-கோடி ரூபாயை வருமானவரியாகச் செலுத்துகிறதென்ற கணக்கை எப்படியோ கண்டுபிடித்து வெளியிட்ட அமைச்சர் பெருமகனார், தமது சிந்தனையைச்சிறிதளவு, அவதிப்பட்டு அல்லலுறும் தமிழ் மக்கள்பால் செலுத்தி யிருப்பாரேல், 18-கோடி வருமானவரி செலுத்துவ தாலேயே ஒருநாடு செழிப்புற்றுத் திகழ்கிற தென்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாதென்ற உண்மையினைத் தெரிந்துகொண்டிருப்பார்.

தமிழ் மாநிலத்திலிருந்து 18-கோடிரூபாய் வருமான வரி செலுத்தப்படுகிறதென்றால், அது, அந்நாட்டு மக்களின் நேர்மையையும், சிறந்த பண்பாட்டையும் காட்டுகிறதென்று கூறலாமேயன்றி, 18 கோடி வரு மானம் செலுத்துவதாலேயே அந்த நாடு எல்லாருக்கும் சமமான வருவாயையும் வளத்தையும் கொண்டிருப்ப தாகச் சொல்லிவிடமுடியுமா? அப்படிச் சொல்லிவிட் டால், அதனை உண்மையென்று ஒப்புக்கொள்ளத்தான் முடியுமா?

எனவே, வரி செலுத்தும் கணக்கைக் காட்டி, அதுவே, ஒரு நாடு வளமாக இருக்கிறதென்பதற்கு அளவுகோல் என்று கூறுவது, வெறும் பேச்சலங்கார மாகுமேயன்றி, உண்மை,அதில் சிறிதுமில்லை என்பதை இங்கு எடுத்துக்காட்டாமல் இருப்பதற்கில்லை.

2-ம் பக்கத் தொடர்ச்சி

வாறு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என்பதை இரு நிலையிலும் பார்ப்போம். அரசாங்கம் அல்லது நாடு தோன்றுவதற்கு முன்பு,மக்கள் இயற்கைச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நல்ல வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். எனவே ஹாப்ஸ் கூறுகிற 'காட்டுமிராண்டிவாழ்க்கை'யை மறுக்கிறார் ரூசோ. ஒவ்வொரு மனிதனும் தன்னிலே நல்லவனாகவும், சமுதாயத்திற்கு நல்லவனாகவும் மொத்தத்தில் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைத்தான் நடந்தி வந்தான். நாளடைவில் மனித சமுதாயத்தில் சொத்துரிமை புகுந்த காரணத்தினாலும் மக்களின் எண்ணிக்கை அதிக அளவில் பெருகின காரணத்தினாலும், அவர்களிடையே போட்டியும் பொறாமையும், பூசலும் பகையும் தோன்றின. 'என் சொத்து என் வீடு' என்ற பாகுபாடு அமைதியான ஓட்டத்தில் தடையை ஏற்படுத்திவிட்டது. ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ளத் தலைப்பட்டனர். தனி மனிதனுக்கு தன்னுடைய உயிரையும் உடைமையையும் பாதுகாத்துக்கொள்ள ஒரு அரசியல் அமைப்புத் தேவைப்பட்டது. அரசாங்கம் உருவாகியது. ஆனால், அந்த அரசாங்கம் ஆளப்படுகின்ற, அதாவது மக்கள் இட்ட கட்டளைகளுக்குக் கீழ்படிந்து செயலாற்ற வேண்டும் என்றார். மக்களுக்குச் சகல அதிகாரங்களையும் கொடுத்த தன்மூலம் ஜனநாயகத்திற்கு அடித்தளத்தை நாட்டிவிட்டார் ரூசோ என்று அரசியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆகவே ஹாப்ஸ், லாக், ரூசோ ஆகிய மூவரும் மக்கள் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்திற்கு பிறகுதான் அரசாங்கம் (நாடு) உருவாகியது என்று தங்கள் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டில் தெரிவித்தனர். ஆனால், சகல உரிமைகளும் யாரிடம் இருக்கவேண்டும் என்பதில் மூவருக்கும் கருத்து வேறுபாடு. ஹாப்ஸ் எல்லா அதிகாரங்களையும் உரிமைகளையும், மன்னனுக்கு அளித்து மன்னராட்சியை ஆதரிக்கிறார். லாக், சட்டத்திற்குட்பட்ட மன்னராட்சியை ஆதரிக்கிறார். ஆனால், ரூசோ சகல அதிகாரங்களும் உரிமைகளும் மக்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கூறி ஜனநாயகத்தின் அடிப்படைக்கொள்கையை ஆதரிக்கிறார்.

இனி, நாடு எப்படிஉருவானதுஎன்பதற்குத் தெய்வீக உரிமைக் கோட்பாடு என்ன கூறுகிறது என்பதைப் பார்ப்போம். நாடு கடவுளுடைய கட்டளையினால்உருவானது. நாட்டை ஆளுகின்ற மன்னனைக் கடவுளே நியமித்தார். அவர்கள் குறைகளை எடுத்துச்சொல்லிஅவர்களைஆட்சிப் பீடத்திலிருந்து அகற்றக் கடவுளுக்குத்தான் உரிமை உண்டே தவிர, மனிதனுக்கல்ல. இதுதான் தெய்வீகஉரிமைக்கோட்பாட்டின்கருத்து. இந்தக் கருத்தை ராபர்ட் பில்மர் என்ற அரசியல் அறிஞர் தன்னுடைய 'பாட்ரியாகா' (Patriarcha) என்ற புத்தகத்தில் தீவிரமாக ஆதரித்து எழுதி இருக்கிறார். மனித குலத்தின் முதல் மனிதனான ஆதம், கடவுளால் நியமிக்கப்பட்ட முதல் மன்னன் என்று வேறு எழுதினார். அதற்கு ஆதரவாகக் கீழை நாட்டு மகாபாரதத்திலிருந்தும் ஆதாரம் காட்டினார். இந்தப் பூலோகம் மிகவும் குழப்பமும் கலகமும் நிறைந்த சேற்றில் சிக்கித்தவித்தபொழுது, மக்கள் கடவுளை அணுகி அவர்களைக் காப்பாற்ற ஒரு தலைவனை அனுப்பவேண்டுமென்று கேட்டார்கள். கடவுளும் மனம்கொண்டு மனு என்ற ஒரு மன்னனை, மக்களை ஆளுமாறு நியமித்தார். எனவே நாடு கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பதற்கு இதைவிடச் சிறந்த ஆதாரம் இருக்க முடியாது என்று கூறினார். இந்தக் கோட்பாட்டுக்கு வலிவும் பொலிவும் ஊட்டிய மன்னன் இங்கிலாந்தை மத்திய காலத்தில் ஆண்ட ஸ்டுவர்ட் மன்னர்களில் ஒருவனான முதலாம் ஜேம்ஸ் என்பவன், "அரசர்கள் ஆண்டவனின் பிரதி பிம்பங்கள்" என்று இறுமாப்புடன் உரைத்தான். ஒருமுறை சட்டமன்றத்திலே ஜேம்ஸ் மன்னன் "மன்னன் எவ்வழி அவ்வழி குடிகள் செல்லவேண்டும். மன்னன் கொடுங்கோலாட்சி நடத்தினாலும், அது மக்கள் செய்த பாவத்திற்கு ஆண்டவன் அனுப்புகிற தண்டனை என்று கொள்ளவேண்டும்"—என்று அதிகார மமதையில் கூறினான். மன்னன் என்ற போர்வையில் மகத்தான தவறுகளைப் புரிந்துகொடுங்கோலாட்சியைத் தழுவிய கோமான்கள் தாங்கள் ஆண்டவன் பிள்ளைகள் என்று கூறிக்கொண்டு மதத்திரையைப் போட்டுத் தங்கள் வெறியாட்டத்திற்கு மூடுதிரை அமைத்துக்கொண்டார்கள். ஆனால், இந்தத் தெய்வீக உரிமைக் கோட்பாடு முதலாம் ஜேம்ஸ்க்குப் பிறகு ஆதரிப்பார் யாருமின்றி அனாதையாக விடப்பட்டுவிட்டது. பகுத்தறிவுள்ள எவரும் இந்தக் கோட்பாட்டை ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. மனிதன் மனிதனே; மன்னனும் ஒரு மனிதனே. மன்னன் கடவுள் அவதாரம் என்று கூறுவது ஊரை ஏமாற்றும் போலி அரசியல் வாதிகளின் செய்கை என்பதை மக்கள் அன்றே அறிந்துகொண்ட காரணத்தினால் இந்தக் கோட்பாடு அடியோடு ஆதரவை இழந்து மறைந்துவிட்டது.

## பலாத்காரக் கோட்பாடு:

ஒரு நாடு ஒப்பந்தத்தின் மூலமோ, அல்லது கடவுளுடைய அருளாலோ உருவாகவில்லை. ஆனால், வலிமை பெற்ற ஒரு தனி மனிதனால் பலாத்கார அடிப்படையில் எழுந்தது என்பது இந்தக் கோட்பாடு. ஒரு கூட்டத்தில் உள்ள பலசாலியான ஒருவன் தன் உடலின் பலம் மூலம் மற்றவர்களை அடக்கி,அவர்களுக்குத் தலைவனாகிறான். தலைவனாக அமர்ந்த ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவுடன், சிறுகச் சிறுக அண்மையில் உள்ளவர்களைப் போர் புரிந்து தோற்கடித்து, ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பைத் தன் உடைமையாக்கி அங்கு தனது அரசாங்கத்தை உண்டாக்குகிறான். "வலிமை பெற்றவன் வையத்தை ஆள்வான்" என்ற அடிப்படைக் கொள்கையிலிருந்து எழுந்தது இந்த கோட்பாடு. 9-வது நூற்றாண்டில் ஸ்காண்டிநேவியா நாட்டில் சிதறிக் கிடந்த பல பிரிவு மக்கள் ஒருவரோடொருவர் போரிட்டு வலிமையுள்ளவன் கையில் வலிமையற்ற பிரிவினர் அனைவரும் ஒன்றுபட்டுக் கீழ்படிந்த ஒரு நாட்டை உருவாக்கினார். அதன் பயன்தான் நார்வே, ஸ்வீடன், டென்மார்க் போன்ற நாடுகள். ஐரோப்பாவில் 'நார்மன்' என்ற ஒரு இனத்தைச் சேர்ந்த கூட்டத்தார் 9-வது நூற்றாண்டில் ரஷ்யாவைக் கைப்பற்றி அதனை ஆளுகின்ற பொறுப்பை ஏற்றனர். பின்பு தங்கள் போர்த்திறமை கொண்டு 10-வது நூற்றாண்டில், நார்மண்டி என்ற இடத்தில் தங்கள் கொடியை பறக்கவிட்டனர். 11-வது நூற்றாண்டில் 'இங்கிலாந்து' நாட்டை உருவாக்கினர். 12-வது நூற்றாண்டில் சிசிலி இராஜ்யங்களை ஏற்படுத்தினர். படைமூலம் பலாத்காரத்தின் மூலம் நாட்டை இவர்கள் உருவாக்கினர். இந்தக் கோட்பாட்டில் ஓரளவு உண்மை இருந்தபோதிலும், 'பலாத்காரத்தினால் அல்லது படையினால்தான் நாடு உருவாகியது' என்பதைவிட, அதுவும் ஒரு காரணமாக இருந்தது என்பதுதான் அரசியல் அறிஞர்களால் ஒத்துக்கொள்ளப் படுகிறது.

○

காஞ்சீபுரம்

3—9—'61.

# தம்பி !

இதய மலரே!
இன்பப் பெருக்கே!
முத்தே! முழுநிலவே!
செந்தேனே! என் மானே!

இதுபோலெல்லாம் பண்பாடிடத் தெரியாப்பாவை—கண் உறக்கம் கொண்ட நிலையில், கவிதை தீட்டப்பட்ட மடலெனத் திகழ்கிறாள். தொட்டிலின் ஓரத்தில் ஒரு கரம்—மற்றொன்று தரையில்! அவள் ஏழை! இல்லம் இல்லாமையின் இருப்பிடம், செல்வம் தொட்டிலில்! அந்தச் செல்வத்தைப் பெற்றுப் பெருமாட்டியாகிட வைத்தவன், கழனி அருகே, காவல் காத்து நிற்கிறான் — களஞ்சியம் போய்ச் சேரவேண்டிய நெல்லை எவரும் களவாடாதிருக்க. அவன் கண்களிலே அறுவடைக்குத் தயாராகி நிற்கும், பயிரா தெரிகிறது! இல்லையே! கதிரின் கனம் தாளமாட்டால், சிறிது கீழே தாழ்ந்தபடி பயிர் இருக்கிறது. "இன்னும் இரண்டே மாதம்! பிறகு பாரேன்!'' என்று கனிவு வழிந்திடச் சொன்னபோது, அவன் தோள்மீது துவண்டு வீழ்ந்து, "உங்களுக்கு எப்போதும் கேலிதான்!'' என்று பேசியபடி, ஒரு பார்வையைச் செலுத்தினாளே, அந்தப் பாவை அல்லவா, தெரிகிறாள்.

அவளோ அயர்ந்து துயிலுகிறாள். ஓடி ஆடி வேலை செய்த அலுப்பு! அலுப்பைக் கவனித்தால்—அங்கம் வளர்க்கவேண்டாமா? அதோ தங்கம்! அதற்காக உழைப்பு —உழைப்பினால் களைப்பு; அயர்ந்து தூங்குகிறாள்; கலாபத்தை மடக்கிக்கொண்டு துயிலும் மயிலனையாள்.

அவன், கழனிப்பக்கம்! தவளைச் சத்தம் காதைக் குடைகிறது. பாம்புகள் சீறுவது போன்ற ஒலியும் கேட்கிறது. காற்றினால் அசைந்தாடும் பயிர், கதிர் முற்றிய நிலையில் இருப்பதால், கொஞ்சும் சதங்கை அணிந்தவள் கோலம் காட்டி நடக்கையிலே எழும் ஓசைபோல இசை எழுப்புகிறது.

ஆயிரம் வேலிக்கு அதிபனாம்! மூன்றடுக்கு மாடிவாழ் மன்னனாம்! இருந்தும் என்ன? தானாகச் சென்று, அவரவரைக் கண்டு, நான்தான் நாலூர் மிட்டாதாரன்! என்று கூறிக்கொள்ளத்தானே வேண்டிவரும் — அவனை உலகறியச் செய்திடவல்ல, மகவு இல்லையெனில்.

தொட்டிலிலே படுத்துத் துயிலும் தும்பைக்கு இந்த எண்ணம்போலும். என்னைக் காணுங்கள்—என் எழிலைக் காணுங்கள்—என் எந்தை தெரிகிறாரல்லவா! என் அன்னை

# பட்டப் பகலில்.....!

(1)

யும் தெரிகிறுரல்லவா!! உலகம் மெச்ச அவர்கள் வாழ்வது எவரால்? என்னுல்! ஆமாம், சின்னஞ் சிறு சிட்டு, என்று மட்டுமே எண்ணிக்கொள்ளாதீர்கள். நான் எந்தைக்கு ஏற்றம் கிடைத்திடச் செய்யும், செந்தாமரை! தெரிகிறதா?—என்று பேசிடும் பருவமல்ல! முகப்பொலிவு அதுபோன்றே விளங்குகிறது.

உன்னேடு உறவாட எண்ணியே, ஓங்கி வளர்ந்து வருகிறேன்! தொட்டால் மெய்சிலிர்க்கும்–ஆகவேதான், என் கரங்களை நீட்டியபடி நிற்கிறேன்! வா! வா! என்றும் அழைக்கிறேன்—என்று தென்னை, நிலவை நோக்கிப் பேசிட இயலுமா! கீற்றுகள் ஆடுவதும் அசைவதும் அதனைத்தான் காட்டுகின்றன.

தொழுவத்தில், தன் கன்றின் முதுகை, நாவினுல் நீவியபடி நிற்கிறது பசு! அதன் கழுத்திலே கட்டப்பட்டுள்ள மணியின் ஓசைதான் இசை! அந்தக் கன்றுக்குத்தான் எத்துணை பெருமை! நான் வேண்டுமென்றே ஒரு முறை என் காதை அசைத்தாலும் போதும்; கண்களால் கனிவுகாட்டி, என்ன? என்ன? என்று கேட்பாள் என் தாய்; கழுத்தை அசைத்து அசைத்து!—என்று கூறுவதுபோலக் குதித்தாடுகிறது கன்று.

தொட்டிலிலே அரசு செலுத்தும் மகவின் முகத்திலே வந்து வந்து போகும் களையும் விந்தை விந்தையான சேதிகள் எதனை எதனையோ கூறுவதுதான் போலும்!

அந்த அணங்கின் முகத்திலேயும் அகத்தின் பொலிவு ஒளிவிடுகிறது. புன்னகை இதழிலே! பல்வேறு வகையான புன்னகை! பெருமிதம் காட்டும் வகை! குறும்புணர்ச்சி காட்டும் வகை! கூச்சத்தைக் காட்டும் வகை! இங்ஙனம் பலப்பல! ஆனுல், எல்லாவற்றிலும் ஓர் இனிய எழில்!!

எண்ணம் பலப்பலவும், கனவு வடிவம் கொண்டு, காரிகைக்கு துயிலில் விருந்தாகிடும் நிலைபோலும்.

அதோ! அதோ! அந்தப் புன்னகைக்கு என்ன பொருளோ? எழுப்பிக் கேட்டிடலாம்! எழுந்ததும், இன்பக் கனவினை ஏன் கலைத்தாய்? முழுதும் நான் கண்டு மகிழ இருந்தேனே! பாதியிலே எனை எழுப்பிப் பாழடித்து விட்டாயே! தின்னப் பழம் எடுத்துத் தோல் நீக்கி நிற்கையிலே, மந்தி பாய்ந்துவந்து பறித்தோடிச் சென்றிட்ட பழங்கதைபோல்!!—என்றெல்லாம் கேட்டு மிக எரிச்சலும் காட்டுவளோ! ஏன் எழுப்பி அவள் மகிழ்வைப் போக்குவது; வேண்டாம்! என்று தோன்றும்.

இதழோரம் எழில் கூட்டும் அந்தப் புன்னகையில், ஏதோ ஒரு நினைவால் வந்துற்ற கூச்சமது நிச்சயமாய்த் தெரிகிறது. உண்மை. கூச்சம் எதன் பொருட்டு? குடத்தை இடுப்பேற்றி, குளிர்மதியைக் கண்ணேற்றி, மலருக்குமணமூட்ட, கூந்தலிலே தானேற்றி, மையுண்ட கண்ணுள், மையலூட்டும் பருவத்தாள், வானகத்தினும் வையகமே சிறந்ததென வாயால் மொழியாமல், கண் வழியாய்க் காட்டிடும் காளையர் நெஞ்சினிலேகனலேற்றி நடக்கின்ருள்; புனல் கொண்டு வருவாளாம்! புன்னை பூத்திருக்கும்! பொன்னில் மணமிருக்கும் என்றே புலவோர் கூறிடவே, மலர்க்குவியல் ஆங்கிருக்கும்! அன்னம் தவழ்ந்தாடும்! அணில்கள் குதித்தோடும்! வண்ணம் பல கொண்ட வண்டுகள் இசை பயிலும்! கோலேந்தும் மன்னனது கூடம்தனில் வீரர் வந்தமர்ந்து வாழ்த்தொலிக்கும் வேளையிலே, வந்து நின்று அவையோரின் அஞ்சலிதனை ஏற்கும் அரசகுலம் இவள் காணீர் எனும் விதமாய் வருகின்ருள்.

நாளைக்கு இருவேளை காளையைக் குளிப்பாட்டிப் பாதுகாத்திடச் சொன்னுர் பரிவுமிகு என் தந்தை! அதற்கே நான் வந்தேன்! என்று கூறுகின்ருன்; இவனை யார் கேட்டார்கள்? மலர்நாடி வந்திடும் வண்டினை எவர் கேட்பர்? கூறுகின்ருன் குமரன், வேறேதும் அறியானும்! வேல் விழியைக் காணுனும்! கழுத்தைக் காலென்றும், காதினைக் கண்ணென்றும தவருக எண்ணியன்ருே, தன்வேலை செய்கின்ருன்! காளையும் வாய்விட்டுச் சிரித்துக் கேலி செய்யும் இவன் போக்கை அறிந்ததனுல்!

நெற்றியிலே, பூத்திட்ட முத்துகளைத் தரைமீது, தையல் வீசுகிருள். இவனுக்குத்தான் அதனுல் எத்தனை தவிப்பு!! கல்லோ அவர் மனமும், கன்னிக்குக் கடினமிகு வேலை பல தந்திட்டார்! மலருக்கு அனல் காற்று! ஆகுமோ? கருகாதோ! மானை ஏர்தனில் பூட்டி, மதியிலியும் உழுதிடானே! மங்கை இவள் வியர்வை மண்ணில் விழும் அளவு, பாடுபடச் செய்கின்ருர்; பாவிகள்; பெற்ருேராம்!!—என்றெல்லாம் கேட்டிடத்தான் துடிக்கின்ருன்; அவன் நினைப்பை, கண்ணேரம் தன்னுல் கண்ட அவள், 'களுக்'கெனச் சிரித்திடாமல், அடக்கிக் கொண்டதுதான் விந்தை!

"மாடோட்டி வந்தவனே! மன்னுரின் மகன்தானே! சின்னுன், உன்பேர்!–ஆமாம் சிலம்பத்தில் வல்லவனும்; சொன்னுர்கள் பலபேர்கள்! வளையலூர் தோப்பினிலே, வகையான பலனுமே! ஆயிரத்துக்கு மேலே இலாபமாம் இவ்வாண்டு; உண்மைதானே! கால்காசும் செல்வழிக்காக் கஞ்சன் மகன் என்ருலும், பசியோடு வந்தவர்க்குப் பரிந்து உணவளிப்பாயாம்! பாமாலை தொடுப்பாயாம். பன்னிருகையன் சொன்னுன்! ஆமாம் உனக்கு இன்னும், ஆகவில்லையே, மணமும்! அத்தைக்கோ மகள் இல்லை! சொத்தைப் பல்லாம், சொக்கிக்கு! உன் அக்கா மகள்! எவள் வந்து உன் மனையில் எழில்கூட்டி நிற்பாளோ! இனியா பிறக்கவேண்டும்! இருப்பாள்

பருவமங்கை! ஏடா! குறுநகையோ? பல்போன கிழவனுக்குப் பாவை கதை தெரிவதுண்டோ என்றெண்ணிப் பரிகாசம் செய்குவயோ!! பழுத்துள்ள நானும் முன்னம் 'பிஞ்சாக' இருந்தவனே! ஆனால், இதனைக் கேள், அங்கும் இங்கும் அலைந்து அலர் கிளப்பி வாழ்ந்ததில்லை! ஆரணங்கே வேண்டாம், நான் அடவி செல்வேன் என்று அகடவிகடம் பேசி அடம் செய்தும் இருக்கவில்லை. அவளா? இவளா? என்று எடைபோட்டுப் பார்த்ததுண்டு! மனதில் இடம் பிடித்த மங்கையிடம் பணிந்துவிட்டேன்! மலர்த்தோட்டமாகியது மண் குடிசை; அவள் கால்பட்டு! இருக்கும் நாற்பதாண்டுக்கும் மேலாக! இலுப்பைத் தோப்பாக இருந்தது, இன்றுள்ள மணிக்கூண்டு! ஏலப்பப் பிள்ளை வீட்டில் ஏது மோட்டாரெல்லாம் அப்போது! சின்ன மாடி வீடு! சத்திரம் கட்டியதில், சரியாகத் தட்டிவிட்டார்! பழைய கதை அதெல்லாம்! ஆமாம்! ஆனல், அன்றுபோலத் தான் இன்றும், ஊரணியில் வருகிறார்கள் உறவுமுறை பெறுகிறார்கள்! உன்மத்தனடா நீ! ஒரு நாழிகைப் பொழுது ஓயாமல் நான் பேசி நிற்க, பதிலேதும் கூறுமல், காளை உடலை, கல்லென்று எண்ணிக்கொண்டு, தேய்த்தபடி இருக்கிருயே! வாய்விட்டா அது சொல்லும். போதுமய்யா தேய்ப்பு என்று! வாயுள்ளதுகளெல்லாம், கண்ணால் பேசிடும் காலமல்லவோ இதுவும்! வருகிறேன், உன் வீடு! இரவு, எட்டுக்கு மேலாக! பார்! பார்! மன்னர், நான் கூறப்போவது கேட்டு, உனைப் படுத்தப்போகும் பாடு! ஊர்கூட்டி உனை நிறுத்தி; வாழத் தெரியாதான், வகையில்லான் என் மகனும்! வழிகாட்டும் விளக்கு வேண்டும், இல்லையேல் வழுக்கிடுவான்! திருவிளக்கு இது காணீர்! திருவினரே! வாழ்த்துவீரே! என்று மன்றமுள்ளோர் எல்லோர்க்கும் மகிழ்ச்சி பொங்கப் பொங்கக் கூறி, உனை மனையறம் பயிலும் வேலை ஏற்றிடச் சொல்வான், பார்! பார்!—என்றெல்லாம் முதியவர் மொழிகிருர், அவளும் கேட்க! ஆயிரத்தெட்டுப் பேர்க்கு, அவர் மணம் முடித்ததுண்டு! ஏடெடுத்தால், பார்வை மங்கியது விளங்கும் அவர்க்கு! மடுவும் மாந் தோப்பும், ஊருணிக் கரையும் உச்சி மாகாளிக் கோயிலும், 'சந்திப்பு' இடமாகும், சேதி காதில் வீழ்ந்திட்டால் போதும்; செல்வார்; கண்ணொளி நிரம்பி நிற்கும்; காட்சியும் காண்பார்; மனதில் உள்ள கருத்தையும் காண்பார் இந்தப் பொல்லாத புலவன்! அவர்தான், இந்தப் புறநானூறுக்கேற்ற புனலோரம் காணுகின்றுர் அகநானூற்றிலொன்று; மகிழ்கின்றுர்.

கேட்டது போதும், இஃதே இன்றெலாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திடத்தக்கது. ஆமாம்! தாயும், என்னவோ ஏதோ வென்று ஏங்குவாள் நேரம் சென்றால்! இவர்கட்கு என்னவேலை! திருக்குறள்தனையே வள்ளுவர் செய்துமே அளிக்காவிட்டால்; ஒவ்வொரு குறளில் காணும் ஒவ்வொரு கருத்தினுக்கும், பாரதம் பாடிக் காலம் பாழ்படச் செய்வார், ஓயாப் பேச்சிலே வல்லவர்கள்! செல்வோம் வீடு! புன்னைக்கு அருகிலேயே புது வீடு கட்டிக்கொண்டு, இருந்துவிடுவதுதானே, ஏனம்மா இங்கு வந்தாய்? என்றெல்லாம், அம்மா பேசி, எனைத் தலைகுனிய வைப்பாள்! என்னவோ எண்ணிவிட்டாள், என்னைக் குறித்துமேதான்! இவர் என்ன எனைக் காணத்தானு, இங்கு வந்தார்? எவர் சொன்னுர்? எவரெவர் வருகிருர்கள் என்பதை அறிந்திடவோ நான் உள்ளேன்! ஏன் வீண்வேலை! "ஏனய்யா எனையே நோக்கி நிற்கிறீர்?" என்று கேட்டேன்; பார்த்திடுவாரை எல்லாம் காரணம் கேட்க நானும், பைத்யமா! காளையைக் காண்பேன், சிலவேளை! தொழுவத்தில் கட்டும்போதும், முட்டுமோ அவரை என்று எண்ணுவதுண்டு! துளியும் அவர் மீது நினைவு அல்ல; காளைமீதே! இதனைக் கண்ட எவரோ சென்று, எதையோகூறி என் அன்னை மனதில் ஐயம் ஏற்றிவிட்டார்; தெரிந்துகொண்டேன். இனி என்ன இங்கு வேலை! எதிர்வீட்டுப் பாட்டி வந்தால், "என்னடி குட்டி, எமக்கும் இருக்கட்டும் கொஞ்சம் தண்ணீர்! எல்லாவற்றையும் நீயே எடுத்துச் சென்றிடாதே! போதும்; வீடு, போ! போ!" என்று பேசிப் பொக்கை வாயால் பொய்க்கோபம் காட்டுவாளே! அவள், இவர் மண்பிசையும் குழவியாக இருந்தபோது, இடுப்பினில் தூக்கிவைத்து, "என் அரசே, தங்கக் கட்டி! எவர் நிகரே, சிங்கக்குட்டி!" என்றெல்லாம் பாட்டுப்பாடிக் கொஞ்சுவது உண்டாம்; சொன்னுர்! சின்ன வயதிலே செக்கச்செவேலென இருப்பாராம், பாவம் வேலை; மேனி செப்பாகிப் போனதில்லை! அதுசரி! நமக்கென்ன அதுபற்றிய கவலை! யாருக்கு அவர் சொந்தம் ஆவாரோ, யார் கண்டார்கள்! — என்றெல்லாம் மனதிலெண்ணி மங்கை நடக்கின்ருள், குடம் குலுங்க; பாதிதான் நீர்—முழுவதும் நீர் நிரப்ப மறந்தனள்; அதற்கா வந்தாள்?

"பேரென்ன" — "அழகி" "பேரழகி" "மயிலே தான்" "அடக்கம்" "அன்னை?" "சொர்ணம்" "அப்படிச் சொல்லு! தாயேதான் மகள்! தங்கத்தாலான சிலை!"

போவோர் வருவோரெல்லாம் பேசுகின்ருர், இம்முறையில், இவளைக் கண்டு.

"தாயேதான் மகள்! தங்கத்தாலான சிலை!" — என்ற பேச்சுக் கேட்டுத்தான், இதழோரம் புன்னகை கொண்டாள், இளமங்கை, துயிலுகையில். பதினெட்டு ஆண்டுகட்குப் பிறகு பாவையாகிப், பெற்ற பெருமாட்டியினை, மகிழவைப்பாள், இதுபோது மகவாக உள்ள செல்வி! இதற்குள் அன்னைக்கு, புன்னைமரம், காளையின் கனிவு, முதியவர் பேச்சு, எல்லாம்; கனவில்!! தாயைப் போல மகள்! தங்கத்தாலான சிலை! என்று ஊரார் பேசு

வது, உதட்டோரம் சிரிப்பளித்து, இனிப்பளித்து நிற்கிறது. கரும்பறியாச் சுவைதானும், கலந்திருப்பது போல, நினைப்பில் இனிப்பேற்றும் நிலைபெறப்போவதனை அறியாது, குழந்தை, அழகு துயில்கொள்கிறது.

பதினெட்டு ஆண்டுகளைக் கடக்கவேண்டும், செல்வி, பாவையாக்கிக், குறுநகைக் குரமனின் மனமதை வென்று, அவன், பைந்தமிழ்ப் பாடலின் பொருட்சுவையூட்டிடும் புலவரின் பேச்சிலே கிடைத்திடும் இனிமையை நுகர்ந்திருந்த நிலைமாறி, 'கண்டுபோல் மொழி! வண்டுசேர் குழல்! கண்களோ சேல்! மதி, முகம்! வேய், தோள்!' என்றெலாம் அவளைப்பற்றி நெஞ்சு நெகிழப் பேசவும், அவன் ஆடல் பாடல் கூடம் மறந்து, அடலேறன்ன தோழர்கள் போர்முறை பயிலும் இடத்தை மறந்து, பழமுதிர் சோலை நோக்கிப் பறந்திடும் புள்ளே போன்றும், நீர்நிலை நாடிச்செல்லும் புள்ளி மானினமே போன்றும், சேல்விழி மாது செல்லும் ஊருணிப்பக்கம் சென்று உலவிடும் போக்குக் கண்டோர், மலரணிக் கொண்டைச் சொருக்கிலே, மதுநிறை அவள் மொழிச் செருக்கிலே, நிலவெறி அங்கக் குலுக்கிலே, மனமது அழிந்த நிலையிலே மையல் கொண்டு அலைகிறான் வீணிலே. தொழிலையும் இழப்பன் சின்னாளிலே', என்று கடிந்துரைத்திடக் கேட்டு 'காதலின் மேன்மைதன்னை உணர்ந்திடா மனத்தினர், கடுமொழி பேசுகின்றார்! விழிவலை வீழ்ந்தேனென்று வீணுக்கு ஏசுகின்றார்! இவர்எனை அறியமாட்டார், என் நிலை காணமாட்டார்! கதிரொளி பட்டதாலே தாமரை இதழ் விரித்திடும், அந்த இயல்பினைக் கரையும் காக்கை அறியுமோ, கூறீர் ஐயா! புள்ளினம் இசையைத்தானே எழுப்பிடும் போதில், ஆங்கு செவிப்புலன் கெட்டோன், என்ன செப்புவான், அறியோமா, நாம்! பறை ஒலி மிகுந்தபோது, பண்ணொலி படுமோ காதில்! அடுப்பினில் ஏற்றியுள்ளபானையில் கொதியும் ஏறித்,தளதளவென்றே சத்தம் கேட்டிடும்போது பித்தன், பானைக்கு என்ன நோயோ? பாவம் அழுகிறதே என்பான்; பானையுள் பாற்சோறுதானும் காணான்! அதுபோல, நீர்கொண்டு செல்லவந்தாள், என் நெஞ்சமே கொண்டு சென்றாள்! குளித்திட நானும் வந்தேன், நீரிலே நெருப்பே கண்டேன்! மறுப்பவர், உண்டு, ஆமாம்; மனதைப் பறிகொடுத்திடாதே என்று மதியுரைப்போரும் உண்டு. அன்னார் மறக்கின்றார் ஓர் உண்மைதன்னை! கண்ணொடு கண்ணுமேதான், கலந்திட்டதாலே, காதல் அரும்பிற்று, மலராயிற்று; அறிந்திட இயலாதார்கள், அறிவுரை என்று எண்ணி அனல்வாரி வீசுகின்றார்; சுடுவது நெருப்பு, ஆமாம், எனினும் மனமது உலையே ஆகி, தழலிங்கு ஓங்கும்போது, இவர்தரும் சுடுசொல்தானும், என் செய்யும்; ஏன் இதை அறியவில்லை; ஊருணிக் கரையோ அன்றி, ஊர்க்கோடித் தோப்போ, எங்கோ, முன்னம் எப்போதேனும் ஓர்நாள், இவர்கள் முறுவல் காட்டி நின்றவரல்லரோ? அவர்க்கு அன்று இருந்ததே போல், எனக்கின்று இலையே என்று ஏன் இவர் எண்ணிடாமல், ஏதேதோ பேசுகின்றார்! இங்கு இவர்க்குப் பதிலைத் தேடி, வீசிடுவதற்கோ, நேரம்? என் மனம் கொள்ளைகொண்ட ஏந்திழை நடக்கும் பாதை இப்படி முள்ளும் கல்லும் நிரம்பி இருந்திடலாமோ? என்பதை எண்ணி எண்ணி ஏக்கமே கொண்டேன், நானும். என்ன நலமா? என்று கேட்கிறார், கேலியாக!! துளையில்லாக் கம்புதானும், குழலது ஆகாதன்றோ? நாணிலா வில்லால், என்ன காரியம் ஆகும், கூறீர்! திரியிலா விளக்கேபோலும், திருஇலா உருவம்போலும், பொன்னிலாப் பேழைபோலும் இருக்கின்றார்; வாழ்கின்றாராம்!! உண்பதும் உறங்குவதும், உற்றதோர் வேலைகள்தாம்! ஆயினும், வேறு இன்றி, இதனையே தொடர்ந்து செய்யும், பேதையர் தம்மைப் பெருமைக் குரியவர் என்று சொல்வர்; பாவையைப் பெற்றபின்னர், கடுகாகும் மலைகள் தாமும்! பட்டது விட்டுத்தள்ளு! என்றிவர், கூறிடக் கேட்டேன் நானும். பட்டது துளிர்த்ததென்று பேசுவர், புதுப்பாங்கு கண்டு. தொழிலிலே வெற்றி காண்பேன். தோகையாள் துணையைக் கொண்டு—என்றவன் எண்ணமிட்டபடி, புன்னை மரமிருக்கும் ஊருணிப் பக்கமதில் உலவுவான்! பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு!

இளமாதோ, இப்போதே காண்கின்றாள், அந்த இன்பச் சூழ்நிலையை; விழியும் திறந்திலை; விந்தை இஃதன்றோ!

விந்தை அல்ல! மனதிலே கொள்ளை ஆசை, மாதாகிப் போனவட்கு! மதலை மங்கையாவாள், மங்கையின் செங்கைகளுக்கு, வளைகளையிட்டும், வாரியே அணைத்துக்கொண்டும், வாழ்வினை அளிக்கவல்லான், வருவான் உரியபோதில்; எங்கு இவர் சந்திப்பார்கள்? என்னென்ன பேசுவார்கள்? என்றெல்லாம் எண்ணும் உள்ளம்; இயற்கைதான், வியப்பென்ன இதிலே!

மதலைகள் குதலைபேசி, மாமணை மாடு ஆக்கி; மனைகளில் ஆடிப்பாடி, பின்னர் மங்கையராகி, மணவாளர் தம்மைக்கொண்டு, மலர்ந்திடும் முல்லைதானும், மணம் பரப்பிடுதல்போல, இல்லறம் தன்னில் நறுமணம் கமழ வாழ்ந்திடும் நிலையைக் கண்டாள்; தன் மகவு படுத்துறங்கும், தொட்டிலின் பக்கம் கீழே படுத்துறங்கிடும் போதினிலே, கண்ட காட்சியால் கொண்ட எண்ணங்கள், கனவெனும் உருவம் தன்னில், உறவாடக் காணுகின்றாள்; வியப்பென்ன? வீணுக்கள் ஏன்? அன்னைக்கு உண்டன்றோ, ஆசை மகவு என்னென்னவிதமாய் ஏற்றம் பெறவேண்டுமென்ற நெஞ்சைத் தித்திக்க வைக்கும் நினைப்புகள் பற்பலவும்.

கனவென்று அதனைத் தள்ளிக், கருத்தறியாது போயின், கனிமீது தோல்கண்டு, சுவை ஏது என்றெண்ணிச், சுவைகாணும் வாய்ப்பிழக்கும் போக்கினர் போலாவர்.

அன்னை காணும் கனவு, தன் மகவுக்கான எதிர்காலம் எங்ஙனம் இருத்தல் வேண்டுமென்று, திட்டமிடுவதின், விளைவு!

கனவு கனவாகவே இருந்துவிடும் என்றெண்ணும் போக்கினர், பேதையர்! பேரறிவாளர் கண்ட கனவெல்லாம் நனவாகி, மாநிலத்தவர்க்கு இன்று மகிழ்வளிக்கக் காண்கின்றோம். எண்ணெய் திரியிட்டு ஏற்றிவைத்த விளக்கிருக்க, இந்த விளக்கைவிட ஒளி மிகுந்த நிலை பெற்று, எண்ணெய் திரியுமின்றி, எரியாதோ ஓர் விளக்கு, என்றெண்ணிக் கிடந்தவனை, இளித்தவாயன் என்றார், ஏனிந்தக் கனவு என்றார்—ஆயினும் அது போன்ற கனவுகளால், அகிலம், பெற்ற பேறு அளவிட்டுக் கூறப்போமோ!

பெற்றோம் ஒரு மகவு — கிடத்தினோம் தொட்டிலிலே! யாருக்கு யார் உறவு? எத்தனை நாள் இவ்வுறவு! தூங்கி விழிக்கையிலே, துவண்டிடலாம். இச் சிசுவும் தொட்டில் கயிறறுந்து, பொத்தென்று கீழே விழுந்து, ஆவிபிரிந்திடலாம், படுத்துறங்கும் குழவிக்கு மாந்தம் கண்டிடலாம், மார்சளி பிடித்திடலாம்; தத்தி நடக்கையிலே கொத்திடலாம் ஓர் பாம்பு! யார் கண்டார், என்னென்ன ஆபத்து வருமென்று! சின்னஞ்சிறு விழிகள், வண்டுகளாய் உள்ளன! நன்று நன்றென்று நாலுபேர் கூறுகின்றனர். அம்மை நோய் வந்தால், அழகான இக் கண்கள், 'பூ' விழுந்துபோனாலும் போய்விடலாம்; யார் கண்டார்! மாடு முட்டிடலாம், வெறிநாய் கடித்திடலாம்; அப்பன் வெறிபிடித்து அடித்து உடலை வாட்டிடலாம்! அத்தனைக்கும் தப்பி, ஆரணங்காய் வளர்ந்தாலும், உற்ற துணை கிடைக்காமல், உதைப்போனுக்கு வாழ்க்கைப்பட்டு, அழுது கிடப்பாளோ, கிணற்றில் வீழ்வாளோ, என்னென்ன விபத்துகளில் இவள் சிக்கிக் கொள்வாளோ? என்னாகுமோ, இவளின் எதிர்காலம் யாரறிவார்!—என்றெல்லாம் தாய் எண்ண, பேயுள்ளம் இருக்கவேண்டும்.

தாயுள்ளம் இருந்திடுமோர் பாங்கினையே, கூறி வந்தேன்; தாய் வயற்றிலுதித்தோர், எவருமே மறுத்திடார்கள்!

ஈன்றெடுத்த மகவினுக்கு எதிர்காலம் இருந்திட வேண்டும் விதம், யாது, என்று எண்ணமிட்டாள், அஃதே கனவு; அஃது கனவாகிப் போய்விடாது; காண்பாள், பெற்ற மகளின் பருவம் வளர்ந்த நிலை!

"வண்ணக் கிளியே, வா! வா! கன்னல் தமிழே வா! வா! முல்லை மொட்டே, வா! வா! அல்லி மலரே வா! வா! அந்தி அழகும் நிலவழகும், அணி அழகுள்ள தமிழழகும் ஒன்றாய்த் திரண்டு வந்துள்ள உயிரே, வா! வா!—என்றெல்லாம் கனிவுடன் கூறிடவும், எதிர்காலம் குறித்துத் திட்டமிடவும், தாய் உள்ளத்தால் முடியும்.

தான் ஈன்றெடுத்த குழந்தைக்கு, பொன்னும் மணியும் பூட்டிப், புதுப்புது ஆடைகள் அணிவித்து, பொட்டிட்டுப் பூமுடித்து, போகவரப் பார்த்துப் பூரித்துப் பெருமைப்படுவது தாய் இயல்பு. தொட்டிலிலே துயிலுகின்ற மயில், தோகை விரித்தாடும் நாளை நினைவிலிருத்திக், கருத்தைக் கரும்பாக்கி மகிழ்வதுவும் தாய் இயல்பு. கனவுகள் காண்பதுவும், நினைவாக மாற்றிடும் மனதுடன்தான்; அதனை மறந்திடுதல் கூடாது.

கழனி காத்திடும் கணவன்—தொட்டிலில் துயிலும் குழவி—படுத்துறங்கும் பெருமாட்டி—இவைகளே, இந்த நேரத்தில், உருவாக, உண்மையாக, உள்ளன. அந்த உண்மை நிலையுடன், தாயன்பு (பற்று பாசம்) இணைந்து பிணைந்து, இழைந்து குழைந்து, எண்ணம் பல சுரந்து, இன்பக் கனவாகி, எதிர்காலம் உருவாகிறது.

கழனியில் காவலிருக்கும் கணவனுக்குப் பதில், ஒரு சோளக்கொல்லைப் பொம்மை!

தொட்டிலில் படுத்துறங்கும் குழந்தைக்குப் பதிலாக, கூரைமீது வீழ்ந்து கிடக்கும் ஒரு மரப்பாச்சி!

தரையில் படுத்துறங்கும் தையலுக்குப் பதிலாக, ஒரு ஓவியம்!

தம்பி! இந்த நிலையிருப்பின், எண்ணமும் இல்லை; எண்ணத்துடன் இணைந்து பிறக்கும் இன்பக் கனவும் இல்லை; அதன் தொடர்பாகவும், விளைவாகவும் ஏற்படும் எதிர்காலத் திட்டங்களும் இல்லை.

நடைபெறக்கூடியது; நடைபெற இயலும் என்பதை உறுதிப்படுத்தும் விதமான, அடிப்படை நிலை; இந்த அடிப்படை நிலையை வைத்து, என்னென்ன விதமான, ஏற்றமிகு செயல்களை, செம்மைகளை, சீர்களைப் பெறமுடியும் என்பதற்கான எண்ணம்—இவை இருப்பின், எண்ணம் ஈடேற வழி கிடைக்கும்; எத்தனை பேர், ஏளனம் பேசிடினும்.

பருத்திச் செடி கண்டு, துணிபற்றி எண்ணிடலாம்; துணி கிடைக்கும் வழி உண்டு; பருத்தி, மூலப் பொருளாக இருப்பதனால்.

வில்வக்காய் கண்டு, நூலாக்கித் தரி அமைத்து, நெய்து ஆடைதனைப் பெற்றிடலாம் என்று எண்ணிடுவது, பேதைமை.

உண்மை நிலையுடன் உயர்வளிக்கும் கற்பனை கலந்துவிட்டால், இன்பக் கனவுகளை, விழித்த நிலையிலும் காண்பர், வித்தகர்கள்.

பட்டப்பகலிலே
பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின்
நிகழ்ச்சி

என்றார் பாரதியார்.

தம்பி! புன்னைமரம் நிற்கும் புனலிடம் சென்ற பூவை, கடிமணம் செய்யும் நோக்குக்கொண்ட காளையைக் கண்டாள் என்று தாய் மனம் கொண்ட எண்ணம், கனவினில் உருவம் பெற்றதுபற்றிக் கூறினேன். அவள் அதனையே, கழனியினின்றும் திரும்பிய தன் கணவனிடம் கூறுவளேல், என்ன சொல்வான்?

காவல் காத்திருந்த அலுப்பின் மிகுதியால், அவன் வாடிக் கிடப்பானேல், "சரி! சரி! இதுமட்டுமா, கனவு காண்பாய்! எட்டடுக்கு மாடியிலே, உன் செல்வி இருப்பது போலவும், பத்துப்பதினெட்டுத் தோழியர்கள் அவளைப் புடைசூழ நிற்பது போலவும், தங்கத்தாலான பல்லக்குத்தனில் ஏறி, நீ, அவளைக் காணச் செல்வது போலவும்கூடக் கனவு காண்பாய்! கனவுதானே!! காலால் வைரத்தை உதைக்கலாம், கண்ணால் 'கைலாய'த்தைக் காணலாம், விதைக்காமலே அறுத்தெடுக்கலாம், விண்ணிலவு வீட்டு விளக்காகக் காணலாம்!"—என்று கேலி செய்திடக்கூடும்.

அவன் மனமும், உடலும் களைப்பினால் தாக்கப் படாமலிருந்தால், "என்ன? என்ன? சொல்லு? சொல்லு! இன்னொருமுறை சொல்லு! புன்னை மரமா? பெரிய மரமா! நிறையப் பூவா! நமது செல்வி அங்கு சென்றாளா? குடமெடுத்தா? தங்கக் குடமா! அவ்வளவு தூரமா நடந்து சென்றாள்! கால் என்ன வலித்திருக்கும் ......" என்று கேட்பான், களிப்புப்பெறுவான், களிப்பூட்டுவான்.

இருவருக்குமே, பிறிதோர் நாள், மனநிலை சரியாக இல்லையெனில்,

கனவு காண வேண்டியதுதான்! வேறு?

என்று சலித்துக்கொள்ளக்கூடும்.

'வாரணம் ஆயிரம் சூழ வலம் வந்த'

கனவு கண்ட கன்னிபோல, ஒரு இல்லத்துப் பெண், தன்னைச் சிற்றரசன், சிறை எடுத்து, 'வாயுவேக மனோ வேகமான' குதிரைமீது அமர்த்திக்கொண்டு, தடுத்திட வந்தவர்களின் தலைகளைக் கொய்துவிட்டுக், கடுகிச் சென்றான் என்று கனவு கண்டு, அப்படிப்பட்ட சிற்றரசன் வரவு நோக்கிக் காத்துக்கிடக்கலாமா? என்று கேட்பார், உளர்.

எனவேதான், தம்பி! தாய், தன் மகவுபற்றிக் கொண்டிடும் எண்ணம், கனவு வடிவமெடுத்தால், எங்ஙனமிருக்கும் என்பதுபற்றிக் கூறினேன்.

தமது எதிர்காலம், தமது குடும்ப எதிர்காலம், தாம் நடத்தும் தொழிலின் மேம்பாடான எதிர்காலம், இவைபற்றித், தோன்றிடும் ஆசைகள் கனவு வடிவமாகினால், வடிவமாகியதுடன், அது நடைமுறையில் பலித்தும்விட்டால் அதனால் பலன், அந்தக் குடும்பத்துக்கு மட்டுந்தான்.

நாடுபற்றி, சமுதாயத்தைப்பற்றி, நல்லோர்கள் கொள்ளும் எண்ணம், அவர்கள் நாட்டினிடம் சமுதாயத்தினிடம் கொண்டுள்ள பற்று எத்தகையது என்பதைத்தான் முக்கியமாகக் காட்டிடும்.

நாட்டிலேயும் சமுதாயத்திலேயும், காணக்கிடக்கும், மூண்டுகிடக்கும், சீர்கேடுகள் நலிவுகள் ஆகிய வற்றினைக் கண்டு, மனம் உளையும் நிலைபெற்ற சீலர்கள், அந்தச் சீர்கேடுகள் ஒழிக்கப்பட்டுச், செம்மை ஏற்பட்டு, நாடோ சமுதாயமோ, நல்ல நிலைமை பெற வேண்டும், அதற்கு வழிவகை என்ன என்று எண்ணுவர்—பட்டப்பகலிலே தோன்றும் கனவு அது.

அத்தகைய கனவு, பலித்துவிடுகிறது.

கனவு காண்கிறான், கருத்தற்றவன்! — என்று கூறிடுவர், தம்மை நிறை அறிவு பெற்றவரெனக் கருதிக்கொள்ளும், மண்டைக்கனம் பிடித்தோர்.

கனவு காண்கிறான்!—என்று, பலருடைய எண்ணத்தைக் கேலி பேசினர்—நாடு இன்று அத்தகைய கனவு கண்டவர்களின் கனவு நனவாகி நிற்பதைக் கண்ணுற்று!!

கனவுகளின் தன்மையைவிட, எத்தகைய விதமாகவெல்லாம் கனவு காண்கின்றனர்; காண இயலும், என்பது குறித்தும், அதனால் கிடைத்த பலன்பற்றியும், அடுத்த கிழமை எழுதுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

# மாற்றான்

கீழ்வானம் வெளுத்துக்கொண்டு வருகிறது. இன்னும் சிறு பொழுதில் அந்த வெண்மை மாறப் போகிறது. செவ்வொளி படரப் போகிறது. எழுஞாயிறு தன் எழுச்சிக் கோலத்தை நிலம் எங்கணும் பொன் துகளாக வாரியிறைத்துக் காட்டப்போகிறது. கண்ணைக்கட்டி, மண்ணை மறைத்து எங்கணும் காரிருளை நிறைத்திருக்கும் நிலையினை மாற்றிக்காட்ட, இருட் சிறையைப் பொடித்துப்போட எடுத்துக் கொண்ட எழுச்சிக் கோலத்தின் முதற்கோலந்தான், அதோ, அந்த வெளுப்பு! சிறுவிழி மூடிச், செயலினை மறந்து, துயிலினில் ஆழ்ந்து கிடந்த தறுகண் யானை செயலினை நினைந்து, விழியினைத் திறந்து திடுமென எழுகின்ற வேளை, துதிக்கையைத் தூக்கி அசைப்பதும், கால்களைப் பெயர்த்து வைத்துப்பார்ப்பதும், வாலை ஆட்டிக்கொள்வதுமான செயலுக்கு முன் செயலாக நிகழ்கின்ற துவக்க கால நிலையன்னது அந்த வெளுப்பு நிலை. மன்னிய குகைக்குள் துன்னிய சிங்கம் தன்னை மறந்து, தன்பெரும் வலியை மறந்து ஆழ்துயிலில் மூழ்கிக்கிடக்கும் நிலையைத் திடுமென மாற்றிக் கொண்டு, சீறி நிமிர்ந்தெழுந்து, செயலாற்றத் துவங்குகின்ற துவக்க நிலைதான் அந்த வெளுப்பு நிலை.

அதோ போய்க்கொண்டிருக்கிறான் கடமையாளன். அவன் எண்ணமெல்லாம் வாழ்வைப்பற்றித் தான். வாழ்வு என்றால், அது அவனுடைய தனி வாழ்வு அல்ல. அல்லது பத்தடிக்கு இருபதடியோ, இருபதுக்கு இருபதடியோ நான்கு சுவர்களுக்கு இடையே தென்படும் சிறு வெளியில் உலவிடும் சின்னஞ்சிறியதான தன்னுடைய சராசரி குடும்பத்தின் வாழ்வுமட்டுமல்ல— இன்னும் சொல்லவேண்டுமானால், அவனுடைய குடும்பம் அந்த நான்கு சுவர்களுக்குள்ளேயிருப்பதோடு தீர்ந்துவிட்டதாக அவன் என்றுமே எண்ணியது கிடையாது. இனியும் அவ்வாறு எண்ணப்போவதில்லை. அவனுடைய குடும்பம் இந்தப் பரந்த நாட்டின் மூலை முடுக்குகள், சந்திகள், தெருக்கள், நடைபாதை, மரத்தடி எங்கணும் நிரம்பிக்கிடக்கும் மனித ஈட்டம் முற்றும் முழுதுமாம். அந்த அனைத்தின் வாழ்வே அவன் வாழ்வு; — அவன் குடும்பத்தின் வாழ்வு. அவனை ஆன்றறிந்த பெரியோர் இலட்சியவாதி என்றழைத்தனர்; அழைக்கின்றனர்.

அவன் கிழக்கு வெளுப்பதற்கு முன் எழுந்துவிட்டான். சேவல் குரல் கொடுக்கு முன் எழுந்துவிட்டான். சீறி நிமிரும் சிங்கத்தின்

**கனகு**

செயலும், திடுமென விழி திறந்து எழுந்து நிற்கும் தறுகண் யானையின் செயலுமே அவன் கண்முன் நிற்கின்றன. அவன் செயலில் முனைவதற்கு அதோ விரைகிறான். நிற்பது அவன் வழக்கமல்ல. தயங்குவது என்றால், என்னவென்றே அவன் அறியான். அச்சம் அவன் காணாதது ஒன்று. ஐயம் அவனை அணுகியதே கிடையாது. அவன் எண்ணத்தில் நிறைந்திருப்பதெல்லாம் அதோ எழுந்து செங்கதிர் பொழியப்போகும் பரிதியொளியின் தெளிவன்ன தெளிவு; அதன் உண்மையன்ன உண்மை; அதன் செம்மையன்ன செம்மை. ஒளிவுக்கும், மறைவுக்கும் அவன் உள்ளத்தில் இடம் என்பதோ இன்மை. நேரிய நோக்கு அவன் நோக்கு. யாரும் எளிதில் அறிந்துகொள்ள, புரிந்துகொள்ள உதவும் போக்கு அவன் போக்கு. அதோ விரைகிறான் அவன். அவன் போகும் வழியிலே என்றுமில்லாப் புதுமையாக எதிர்ப்படுகிறான் ஒருவன், எதிர்ப்பட்டவன் ஏறுநடையானுக்கு எல்லாவற்றிலும் எதிரானவன், மாறுபட்டவன். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவன், ஒரே இனத்திற் பிறந்தவன். எனினும், மாற்றானோடு உறவாடி, உறவாடி, அவனுக்குத் துணைபோய், துணைபோய் மாற்றானினும் கொடிய மாற்றானாகிவிட்ட— மாற்றான் செய்ய நினைக்காத கொடுமையைத் தானே ஏற்று முடிக்கும் மிகக் கொடும் மாற்றான் அவன்.

முன்னவனைச் சான்றோர் இலட்சியவாதி என்றே அழைப்பர்; எனினும், நாம் அவனை ஏற்றான் என்போம். சுருக்கம் கருதியல்ல. புதுமை விரும்பியல்ல. பொருத்தம் பார்த்துக் கூறுகின்றோம். மாற்றானையும் — அதாவது தன் இனத்தையும், தன் பண்பாட்டையும், தன் மொழியையும், தன் திருநாட்டையும் பொருளுக்காக, புகழுக்காக, எதிரியிடம் விருதுகள் பெறுவதற்காக, அவன் பாராட்டைக் கேட்பதற்காக, அவன் நடத்தும் சதியாட்சியின் பேரவையிலேதான், அமைச்சுப் பூண்டு, எதுவும் அறியாதார், ஏய்த்திளைத்தார்—உள்ளத்துள் தன்னைப் பற்றி என்ன எண்ணிக்கொண்டிருந்தாலும் — வெளிப்படையாகத் தன்னைப் புகழவேண்டும், 'பெரியீர்,' சான்றீர், தன்னலந்துறந்து பொது நலங் கொண்டீர் என்று போற்ற

வேண்டும் என்று நாட்டங்கொண்டு அவல வாழ்வு வாழ்வதற்கு ஆரவார மாக ஈடுபடும் மாற்ருனுகிவிட்டவனை யும் திருத்தி, நல்லாறு படுத்தற்கு ஏற்றவனும் இருப்பதால், அந்த அரிய கடமையை ஏற்றுக்கொண்டு விட்டதால் அவனை நாம் ஏற்ருன் என்போம்.

பின்னவனை மாற்ருன் என்ருேம். அது எவ்வாறு பொருந்தும்? ஒரு கொடியில் வந்தோன், ஒரு குருதி ஓட்டத்தான், உடன்பிறந்தான் எவ் வாறு மாற்ருன் என விளித்தற்குப் பொருந்துவோன் ஆவான்? அது தவறு. பேதைமையும்கூட என்று சிலர் வாதிட வரக்கூடும்,—வருகின் ருர்கள். மாற்ருன் என்றது தவறு அல்ல. பேதைமையல்ல, அது சரியே! அறிவிற்குப் பொருந்துவதே! மேலே விதந்து சொன்ேனம். மீண் டும் விளக்குவோம்.

ஏற்ருன் என்று நாம் எடுத்துச் சொன்னது நாட்டுப்பற்று உடை யானை, நல்லதொரு கருத்தினை நாட் டிலே பரப்ப வந்தானை; தன்னுட் டைப் பிறனிடம் அடிமைப் பட்டயம் எழுதிக் கொடுப்பானைத் தவறுடை யான் என்று எடுத்துச் சொல் வானை, தன்மொழி காக்க, தன் திருநாடு காக்கத் துடிதுடித்து நிற் பானை, தன்னுடைய உடன்பிறந்தார் உண்ணும் சோற்றுக்கும், உடுத்தும் உடைக்கும், இருக்கும் இடத்துக்கும் சொந்த நாட்டில் வழியின்றி, வகை யின்றி வேற்று நாடு செல்வதும், அங்கே வாழவும் முடியாமல், சாக வுந் துணியாமல் அல்லற்பட்டு, அலமந்து நிற்பதும், கண்ணீர் வடித் துச் செந்நீர் கொட்டி, வேற்று நாட் டாரின் எள்ளலுக்கும், இகழ்ந் துரைக்கும் கருவியாவதும், தோட் டித் தொழில் புரிந்தும், தோள் பெயர ஏவல் செய்தும், வாட்டம் அகல்வதற்கு வகையிலேயே என் றேங்கி மானத்தை விற்பதும், மதி கருகித் திருடுவதும் கூடாது, கூடாது;நம்மவர் அவலநிலே போக்கு தல் அவசியம் தேவை; தவழுதல் வேண்டும் வளமெலாம் நம் திருநாட் டில் என்பானை, என்பதற்காக ஓயாது ஒழியாது உழைப்பானை ஏற் ருன் என்கிருேம் நாம்.

அந்த ஏற்ருனின் ஒவ்வொரு செய லுக்கும் மற்றவன் மறுப்புவிடுத்துக் கொண்டே வருகிருன். 'இந்த ஏற் ருனே ஒழிப்பதே என் வேலே' என்று அறைகூவிப் பழித்துத் திரிகிருன். இந்த ஏற்ருன் 'தன்னுரிமை வேண் டும். என் நிலம் பிற நாட்டானுக்கு அடிமைப் பட்டிருத்தல் கூடாது' என்கிருன். மற்றவனே 'தன்னுரி மையாவது, ஒன்ருவது! பிறநாட் டான் ஏவலில் என் நாடு இருப்பதே என் நாட்டுக்குப் பாதுகாப்பு' என் கிருன். தன் வலி மறந்து பேசு கிருன். தன் நிலேயைக் குறைத்து மதிக்கிருன். தன்னுரிமையை எள்ளி இகழ்கிருன். தன் மானம் இழந்து நிற்கிருன். தன் நாட்டுக்கென ஒரு தனிப் பண்பாடு இருப்பதை மறுக் கிருன் 'தமிழன் என்ருேர் இன முண்டு, தனியே அதற்கோர் குண முண்டு' என்று மேடையிலே, நாட் டில் உலவுகின்ற ஏடுகளிலே எல் லாம் முழக்கம் செய்துவிட்டு, அந்த இனத்தின் உயர் தனிச் சிறப்பையும், உயர் தனிக் குணத்தையும், உயர் தனிப் பண்பையும் எடுத்துச் சொல்லி ஏற்றம் அடைய வழியாக, உரிமை வாழ்வு வேட்பானை வெறி யன் என்கிருன். தன் மொழி மாற் ருனின் பாதத்தடியில் கிடந்து நசுங் குவதைக் கண்டும் காணுதவனைப் போல், வேறு எது எதையோ பேசு கிருன். தன் உடன்பிறந்தார் வேற்று நாட்டானின் ஆட்சிப் பிடி யின் காரணமாக வதைபடுவதை, துயருழந்து நிற்பதைப் பார்த்து, அதற்கு நாமே பரிகாரம் காண வழி கோலவேண்டும் என்ற எண்ணமே இன்றி, அது நம்மை ஆள்வோனின் தயவால் களேந்தெறியப்படவேண் டியதொன்று என்று கூறுகிருன்; எதிர்பார்க்கிருன்.

வழிப்பறி கொடுத்தோன் ஒருவன், வழி மறித்துப் பறித்தவன் தன்னை அன்போடு நடத்தினுன்; வீடுவரை காவலாக உடன் வந்தான் என்று சொன்னுல், யாரேனும் அதை 'நன்று, நன்று; நல்லவன் வழிப்பறி செய்தான்' என்று கூறத் துணி வரோ! 'அன்போடு நடந்தானே, காவலாக உடன் வந்தானே! உன் உடைமைகளையெல்லாம் அவன் கவர்ந்துகொண்டுதானே போய்விட் டான்! உடைமைகளைப் பறித்துக் கொண்டுவிட்ட பிறகு, காவல் ஒரு கேடா?' என்றுதானே அறிவறிந் தார் கடாவுவர்? 'வழிப்பறிக்காரன் செய்த செயலே நல்ல செயல். அவன் காவலாக உடன் வந்திரா விட்டால், நான் வீடுவந்தே சேர்ந் திருக்கமாட்டேன். எல்லாரும் அந்த வழிப்பறிக்காரனையே துணைக்கு அழைத்துக்கொள்ளவேண்டும்' என்ற கூற்றை உடைமையைப் பறி கொடுக்கத் துணியாதார் யாரே னும் ஒப்புக்கொள்ள முடியுமா? மொத்தத்தில் ஏற்ருனின் ஒவ்வொரு சொல்லேயும் மற்றவன் மறுத்து நிற்கிருன். ஏற்ருனின் ஒவ்வொரு செயலும் கூடாது, ஆகாது என்று எதிர்த்து நிற்கிருன். எதிர்த்து நிற் பவன் எதிரிதானே! மாறுபடக் கூறு பவன், மாறுதல் உடையவன் மாற் ருன் என விளிக்கப்படுவதில் தவறு என்ன காணமுடியும்? மனிதனுக்கு ஊறு விளைக்கும் நோய் அவன் உட லோடு ஒட்டிக்கொண்டுதான் ஊறு விளைக்கிறது. நோய் உடலோடு ஒட்டிக்கொண்டிருப்பதால் நோய் கொண்டவனை நோயாளி என்று கூருமல் வேறு எவ்வாறு குறிப்பிடக் கூடும்? ஒரு கொடியில் உதித்தா லும், உடன் பிறந்து உய்வதானு லும், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை யானுலும், மனத்திலே கால்கொண்டு விட்ட இருள் எனும் பெருமாசு நீங் கும் வரை.—அந்த இருள் காரண மாக அதனைச் சுமந்து திரிவான் இரு ளன் என்றுதானே அழைக்கப்படு தல் வேண்டும்?

நான் சொல்ல வந்தது வேறு. இங்கே மற்ருென்றை விட்டேனே என்னவோ! எனினும் சொல்லவந்த செய்தியோடு இதுவும் ஒட்டியே வரு கிறது என்று அமையலாம்.

அதோ நிமிர்ந்த நடையோடு ஏறென ஏற்ருன் விரைகிருன். எதிரே வருகிருன் மாற்ருன். இரு வரும் ஒருவரையொருவர் நோக்கு கொள்கின்றனர்.

"ஓய் ஏற்ருரே, இந்த வைகறைப் போதில் எங்கு கிளம்பிவிட்டீர்? ஏன் இந்த அவசரம்?"

"காலம் சிறிது. கடமை பெரிது. நான் ஆற்றவேண்டிய செயல்கள் அநேகம். மெல்ல நடக்க வேளை யில்லே. அதனுல் விரைகிறேன்."

"என்னய்யா காலமும், கடமை யும், உரிமையும்!—யாரும் காணுத ஒன்றை நீர் கண்டுவிட்டாற்போல்!"

"யாரும் காணுததை அல்ல. நல்லறிஞர் கூறியதை, உயர்வு எனச் செப்பியதை நான் செயலிற் காண விழைகிறேன்."

"நீரும், உம் செயலும்! ஆமாம்; நீர் சொல்வதை எத்தனைபேர் மதிக் கிருர்கள்? உம் வழி எத்தனைபேர் வருகிருர்கள்?"

"என்னை மதிப்போர் தொகை பெருகவேண்டுமென்பதற்காக எந்த வொரு செயலிலும் நான் முனைய

விரும்பியதில்லை. விரும்பப்போவது மில்லை. நியாயமும், நேர்மையும், உண்மையும் உரிமையும் நான் ஏற்றுள்ள ஒவ்வொரு செயலிலும் நிரம்பியிருக்கின்றன. அதுவே என்பால் நிறைவை அளிக்கின்றது. நியாயத்தையும், நேர்மையையும் மதியுங்கள் என்று யாரையும் கூவி யழைக்க வேண்டுவதில்லை. அவ்வாறுதான் உண்மையும், உரிமையும், மனிதன் மட்டுமல்ல, உயிருள்ள பொருள் ஒவ்வொன்றுமே உலவுதற்கு உயிர் மூச்சு மிகமிகத் தேவை. அதாவது இன்றியமையாதது. ஆறறிவில்லா விலங்கிடத்திற்கூட உயிர் மூச்சைப்பற்றிச் சொல்ல வேண்டுவதில்லையென்றால், பகுத்தறிவுடைய, சிந்திக்கும் திறன் பெற்ற மனிதனைப்பார்த்து, 'மூச்சை இழு, மூச்சைவிடு' என்று கூறிக் கொண்டு திரியவேண்டியதில்லை. அதைக்கூட இன்று இந்த நிலப் பரப்பில் உங்களைப்போன்றாரிடம் எடுத்துச் சொல்லவேண்டியுளதே என்பதற்காக நான் மிகமிக இரங்குகிறேன். என்வழியில் வருவாரின் தொகை ஊருருக்கும் பெருகிக் கொண்டேதான் வருகிறது. பெருமைக்காகச் சொல்லவில்லை. உண்மைநிலை அது.''

"அது என்ன 'பெருமைக்காகச் சொல்லவில்லை?' நீர் பெருமைபட்டுக்கொண்டுதான் சொல்கிறீர்!''

"அப்படியேதான் வைத்துக் கொள்ளுமேன்?''

"உம்முடைய பெருமை வீண் பெருமை. நீர் எதிர்பார்த்து ஏமாற்ற மடையப்போகிறீர்! நீர், பெருகிக் கொண்டுவருகிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அந்தப் பெருகிக்கொண்டு வந்தோர் அருகிக்கொண்டு போகிறார்! தெரியுமா உமக்கு? உமது பெருக்கம் காற்றூதப்பட்ட பலூனைப்போன்ற பெருக்கம். அது பட்டென்று ஒரு தடவை தெறித்துவெடித்துவிட்டது. திரும்பவும் அதை நீர் ஒட்டுப்போட்டு ஊதிக்கொண்டு திரிகிறீர்! ஒட்டுப் போடப்படாத புதிய பலூனே பட்டென்று, நீர் எதிர்பாராத முறையில் —அதன் இயல்புக்கேற்ப வெடித்து விட்டது என்றால், ஒட்டுப்போட்ட பலூனா நெடுநாள் நிற்கப் போகிறது?''

"என் அணியின் பெருக்கம் பலூனின் பெருக்கம் என்றா சொன்னீர்? பாவம், உம் நிலை கண்டு வருந்துகிறேன். என்னைப்பற்றி மிக மிகக் குறைவாகவே பேசவேண்டும் என்பது உம் நோக்கம். இப்போது அது உம்முடைய இலட்சியமாகவே மாறிவிட்டது. நல்லதைக் குறைத்தும், அல்லதைக் கூட்டியும் பேசிப் பேசி நீர் நன்றாகப்பயின்றுகொண்டு விட்டீர். இதற்கென ஒரு தனி அணியே நீர் தயார்செய்துகொண்டு வருகிறீர். முதலில் நோக்கமாக இருந்ததை இலட்சியமாக்கிக் கொண்டீர்! இப்போது அது உம் இயல்பாகிவிட்டது. என்னைத் திட்டுவதற்கும், என்னையும் என்வழியில் தொடர்வோரையும் தீர்த்துக் கட்டுவதற்கும் நீர் முறையென்னவோ வகுத்துக்கொண்டுதான் உள்ளீர்! ஆனால், முடிவிலே அதனால் உமக்கொன்றும் பயனில்லையே! என்னைத் திட்டுவதனால் உமக்கு நன்மையுள்ளது என்றால், என்னைத் திட்டிக்கொண்டே இரும். அதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். என்னைப்பற்றியும், என் அணியைப்பற்றியும் அவதூறுச் செய்திகளை நீர் பரப்பினால்தான் உம்மால் வாழமுடியும்; உமக்கு வேண்டியவர்களிடத்தில் நீர் பாராட்டுப் பெறமுடியும் என்ற நிலையில் நீர் தள்ளப்பட்டுக்கிடக்கின்றீர்என்றால், அதுதான் நீர் வாழ்வதற்கு வகை என்றால், அதைத் தாராளமாய்ச் செய்துகொண்டே இரும். அதன் மூலம் வாழ்ந்துகொண்டே இரும். 'வாழ்க நீவீர்! வாழ்க நும் அவதூறு!' என்று வாழ்த்துக்கூடக் கூறுகின்றேன். அதேவேளை, நீர் எனக்கு உடன்பிறந்தார், என்னுடைய நாடாகிய இந்தப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர். என்னையும், என்னைப்போன்று இந்த நாட்டிலுள்ள மற்ற விடுதலை விரும்பிகளையும் ஒழிக்க முனைந்து, உம்மை நீரே ஒழித்துக்கொள்ளும் செயலில் இறங்கியிருக்கிறீர்! உம் திருநாட்டின் வளத்தைக் குலைக்க, வாழ்வைச் சிதைக்க, உம்மை அறிந்தோ, அறியாமலோ நீர் ஈடுபட்டிருக்கிறீர் என்பதை எண்ணும் போதுதான் என்னால் வருந்தாமலிருக்க முடியவில்லை.

"நீர் சொன்னீரே, என்னைப் பின் தொடர்ந்து வருவோரின் பெருக்கம் காற்றூதப்பட்ட பலூனின் பெருக்கம் என்று. அதுதான் நீர்போட்டுக் கொண்டிருக்கும் தப்புக் கணக்கில் மிகப்பெரும் தப்புக் கணக்கு. நான் சொல்கிறேன்: என் பின்னால் திரண்டு வருவோரின் பெருக்கம் அரிய முயற்சியால் தோண்டியெடுக்கப்படும் செம்பொன்னின் திரட்சியன்ன பெருக்கம். அந்தத் திரட்சியிலிருந்து ஏதோ களையப்பட்டுப் போனதைப் பார்த்து நீர் கெக்கொலியோடு எக்காளமிடுகின்றீர்! நெஞ்சில் நிறுத்தும், அந்தக் களையப்பட்டதும் ஒரு நாள் திரட்டியெடுக்கப்பட்டதுதான். ஆனால், செம்பொன்னல்ல, தோண்டியெடுக்கப்படும் செம்பொன் முற்று முற்றும் செம்பொன்னாகவே இருக்கும் என்று எப்போதுமே யாரும் எதிர்பார்க்க முடியாது. நிலத்திலிருந்து தோண்டி எடுக்கும்போது, அந்தச் செம்பொன்னோடு கல் சேர்ந்திருக்கும், மண் சேர்ந்திருக்கும், பிற மாசுகள் கலந்திருக்கும். செம்பொன் திரட்டப்பட்டு, உருக்கி ஒன்றாக்கப்படும் போது, பொன்னோடு கலந்து கிடக்கும் கல்லும், மண்ணும், தானே களைந்துகொண்டு போய்விடும். அல்லது களைந்தெறியப்பட்டுவிடும். அப்படிக் களைந்தெறியப்படுவதைப் பார்த்துவிட்டு; சேர்த்து, ஒன்றாக உருக்கி வார்த்து வைக்கப்பட்ட செம்பொன் திரட்சியே பிட்டுக் கொண்டுபோய்விட்டது; போகிறது என்று நீர் கூறுகிறீர்! அது உம்முடைய பேதைமையால் எழுந்த கூற்று. உம் அலர் பரப்பும் மனப்பான்மையில் எழுந்த கருத்து. நாங்கள் திரட்டி வைத்திருக்கும் செம்பொற் குவையில் இன்னும் மாசு இருக்கலாம், மண் இருக்கலாம், கல் இருக்கலாம், அவை மேலும் களையப்பட்டுப் போகலாம்; போகவேண்டும். அது கண்டு நான் மகிழவேண்டுமேயல்லாமல், வருந்துதற்கு ஒன்றுமே இல்லை. மாசுகள் நீக்கப்பெற்றுப், புடம் போடப்பட்டுப் போடப்பட்டு, தனித் தங்கம் திரட்டப்படுவதையே நான் விரும்புகிறேன். வேண்டுவதும் அதுதான்.''

"நீர் சொல்வதை அப்படியே திருப்பி ஏன் வேறு விதமாகச் சொல்லக்கூடாது? அதாவது, நீர் சேர்த்து வைத்துக்கொண்டிருப்பது முழுதும் இல்லாவிட்டாலும், மிகப்பெரும் பகுதி கல்லும், மண்ணும், மாசுகளுந்தான். அதிலே ஏதோ மிகச் சிறு பகுதி நல்ல பொன் கலந்திருக்கிறது. அந்த நல்ல பொன் அப்போதைக்கப்போது தன்னை யுணர்ந்துகொண்டு தனிமையாகி விடுகிறது. இப்படியே உம்முடைய பயனற்ற குவையில் தன்னையறியாமற் கலந்து கிடக்கும் நல்லனவெல்லாம் களைந்துகொண்டே, பிட்டுக் கொண்டே போய்விடும். பிறகு எஞ்சியிருக்கப்போவது நீரும், நீர் பொன்னென்று திரட்டி வைத்துக்

காத்துக்கொண்டிருக்கும் மண்ணும், கல்லும், மாசுகளுந்தான் என்கிறேன் நான். இதற்கு என்ன சொல்கிறீர்?''

"தங்கம் இருக்குமிடம் பார்த்து, அங்கே சுரங்கம் அமைத்துத் தோண்டிக்கொண்டிருப்பவன், தங்கத்தை விட்டுவிட்டு, மண்ணையே தோண்டிக் குவிக்கிறுன் என்று நீர் சொன்னுல், அதை நான் வாயால் மறுக்கவேண்டுவதில்லை. 'இதோ பாரும்! இது கல்லின் திரட்சியா, மண்ணின் திரட்சியா? அல்லது பொன்னின் திரட்சியா?' என்று தோண்டப்பட்ட பொற் குவையை எடுத்து உம்முடைய கண்ணுக்கு நேரே காட்டுவதைத்தான் பதிலாக்க வேண்டும். பொற் குவையை நீர் மண் குவை என்ருல், அதற்கு நான் என்னசெய்ய முடியும்!''

"நீர் என்னவோ சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்—பொற் குவை, கொள்கைக் குன்றம் என்றெல்லாம்! ஆனுல், நடப்பது என்னவோ வேறு விதமாக இருக்கின்றது. இதோ பாரும், செய்தித்தாள்! இதில் எத்தனை விலகல்கள் இருக்கின்றன பார்த்தீரா? இன்னும் இந்தப் பக்கம் புரட்டிப் பாரும். எத்தனை நல்ல நல்லவர்கள் எல்லாம் உம் அணியிலிருந்து பிய்த்துக்கொள்வதற்கு நாள் குறிக்கப்போவதாக அறிக்கை விடுத்திருக்கிருர்கள், பார்த்தீரா? இன்னும் இந்தப் பக்கம் பாரும், உம்முடைய அணியிலிருப்போரெல்லாம் கொள்கைக் குன்றங்கள், கடமை வீரர்கள் என்கிறீரே, அவர்கள் செய்த அடாத செயல்களைப் பாரும். எதிர்க்கட்சிக்காரனிடம் வழிப்பறி செய்திருக்கிருர்கள் உம் கட்சிக்காரர்கள் கருத்து மாறுபாட்டுக்காக உம் அணியைச் சேர்ந்தோரே ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டிருக்கிருர்கள். இவையெல்லாம் பொய்யா? கட்டுக்கதையா?''

"பொய்யா, கட்டுக்கதையா என்று என்னிடம் வினவாதீர். உம் உள்ளத்திடம் நீரே வினவிப் பார்த்துக் கொள்ளும். அவற்றிற்கெல்லாம் அடிப்படை எங்கே இருக்கின்றதென்று என்னிடம் சொல்லவேண்டாம். உம் உள்ளத்திடம் நீரே சொல்லிப் பார்த்துக்கொள்ளும். நீரோ செய்தித்தாளைக் காட்டினீர். நான் அப்படிக் காட்டவேண்டுவதில்லை. நான் எதையேனும் சுட்டிக் காட்ட வேண்டுமானுல், அது நாடறிந்தது, நல்ல உள்ளங்கள் எல்லாம் அறிந்து வருந்திக்கொண்டிருப்பதாகத்தான் இருக்கும். உம்மைப்போல் புனைந்துரை செய்யப்பட்ட செய்தித்தாளைக் காட்டவேண்டுவதில்லை — விளங்கச் சொல்கிறேன்: என்னுல் மருத்துவமனைகளைக் காட்டமுடியும். அடித்துத்தூக்கிட்டுத் தொங்கவிடப்பட்ட மரங்கள், இவை இவை என்று தொட்டுக்காட்ட முடியும். இன்னும் உறையாமல், காயாமல் நிலமெங்கும் பரந்து சேருகிக்கொண்டு கிடக்கும் குருதியைக் காட்டமுடியும். தீ மூட்டப்பட்ட வீடுகளையல்ல, ஊர்களை, வெட்டிச் சாய்க்கப்பட்ட கொடிமரங்களை நூற்றுக்கணக்கில் காட்டமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக இலட்சியத்தை இலட்சத்திற்கும், ஆயிரத்திற்கும் விற்கப்பட்ட, வாங்கப்பட்ட நிகழ்ச்சிகளின் நிழற்படங்களையே காட்டமுடியும்.''

"நீர் பேசக் கற்றிருக்கிறீர்! நீர் வாய்ச்சொல் வீரர்! உம்மிடம் பேசி நான் மிச்சங்காண நினைக்கவில்லை. என்னுடையதெல்லாம் செயல் தான்.''

"அது ஒரு காலம். இப்போது அல்ல. நான் ஒன்று சொன்னுல், நல்லதைச் சொன்னுல், இன்று அதை மறுத்து நீர் ஆயிரம் சொல்கிறீர்—அல்லதை!''

"என்னவோ, நீர் எதிர்பார்ப்பது ஒன்றும் நடக்கப்போவதில்லை. அதைத் தெரிந்துதான் நான் அன்றே என் மேலோரிடத்தில் வாக்குக்கூடக் கொடுத்துவிட்டு வந்துள்ளேன் — உம் கூட்டத்தை அழிக்க நாங்கள் ஒன்றும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுவதில்லை. உம்மோடு உம் கூட்டம் தன்னைத்தானே தாக்கிக்கொண்டு இன்னும் சில நாளில் அழிந்துவிடப்போகிறது என்று. பாவம், உம் வேலையெல்லாம் வீண் வேலையாகப் போகிறது. உம் முயற்சியெல்லாம் வீண் முயற்சியாகப் போகிறது. பேசாமல் உம் அணியை இப்போதே கலைத்து விடும். உம் அணியிலிருப்போர் கொள்கைக் குன்றம், புடம்போட்ட தங்கம் என்று நீர் வீணே எதிர்பார்த்து ஏமாந்துவிடப்போகிறீர்! ஏமாற்றம்வருமுன் நீரே உம் வழியை மாற்றிக்கொள்ளும்!''

"நல்ல அறிவுரை. உம் வேலையைச் சுலபமாக்க அருமையான தொரு யோசனை—நீரே சொன்னீர், ஊரூருக்கும் என் அணியில் பிளவுகள், வெடிப்புக்கள் என்று. அப்படிப் பிளவுகள், வெடிப்புக்கள் உண்மையென்றே நீர் சொல்கிறபடி வைத்துக்கொண்டாலும், அந்தப் பிளவையும், வெடிப்பையும்கூட நான் வரவேற்கிறேன். எனக்குக் கூட வேண்டுவது வெறும் ஆட்பெருக்கம் அல்ல—பலப்பெருக்கம்தான். ஊருக்குப் பத்துப் பேர் நல்லோர், கொள்கையில் உறுதிகொண்டோர் இருப்பதே எனக்குப் போதும்.''

"என்னவோ, ஊருக்குப் பத்துப் பேர்! அந்தப் பத்துப்பேரும் எதற்கு உதவுவார்கள் தெரியுமா? கூட்டம் போடுவதற்கு உதவுவார்கள். கூட்டத்திலே நின்று கூவிப் பிதற்றுவதற்கு உதவுவார்கள். வேறு எதற்குமே இலாயக்கு இல்லை. ஏன் இலாயக்கு இல்லை என்று கேட்கின்றீரா? உங்கள் நோக்கமோ, திட்டமோ, நீங்கள் செப்பித் திரிகிறீர்களே, குறிக்கோள் என்று, அந்தக் குறிக்கோளோ தெள்ளத் தெளிவானதாக இல்லை. திட்டவட்டமாகவும் இல்லை.''

"எங்கள் குறிக்கோளும், நோக்கமும்தான் தெள்ளத் தெளிவானதாக இல்லை என்கிறீர்களே, பின்னர் ஏன் பகல் எல்லாம் எங்களைப் பற்றிப் பேசுகின்றீர்கள்? இரவெல்லாம் எங்களைப்பற்றியே கனவு காண்கிறீர்கள்?''

"யார் அப்படிச் சொன்னது? அதெல்லாம் நீங்கள் காணும் கனவு. பேசாமல் நான் சொல்கின்றபடி செய்யுங்கள். உங்களுக்கு ஒரு தொந்தரவும் இல்லை. துன்பமும் இல்லை. விடுதலைப் போராட்டம், உரிமைக் கிளர்ச்சி, இதெல்லாம் வாயால் சொல்வதுபோல் அவ்வளவு எளிதான செயல்கள் அல்ல. போராட்டம் என்ருல் என்னவென்றே உங்களுக்குத் தெரியாது. அதில் இறங்கிப் பார்த்தால்தான் அதன் கடுமையையும், கொடுமையையும் காணமுடியும். 'இதோ நான் தயார், நான் தயார்' என்று கூவிக்கொண்டு முன் வருவதாகச் சொல்கிறீரே, உங்கள் அணியிலிருப்போர். அவர்களில் ஒருவர்கூட இதில் தாக்குப் பிடிக்கமாட்டார்கள்! நாங்கள் ஏதாவது எதிர்நடவடிக்கை எடுக்கத் தொடங்கினுல் உடனே மூலைக்கு ஒருவராக எல்லாரும் தலை தெறிக்க ஓடிவிடுவார்கள். கடைசியில் எஞ்சுவது ஒரு அஞ்சோ, பத்தோவாகத்தான் இருக்கும்!''

"உம்மையும், உம்மைப்போன்ற மாற்ருரின் அடிவருடிகளையும் தவிர,

மற்றவர்கள் எல்லாம் ஒன்றுக்குமே உதவாதவர்கள், அறிவு இல்லாதவர்கள், துணிவு இல்லாதவர்கள், கோழைகள், கொள்கைப் பிடிப்பு இல்லாதவர்கள் என்று நீர் கணக்குப் போட்டுக்கொண்டு காலம் முழுதும் உழல்கிறீர். உரிமைப் போராட்டம் என்று ஒன்று தொடங்கினால், அதை நீரோ, உம் எசமானர்களோ கைகட்டிக்கொண்டு வேடிக்கைபார்ப்பீர்கள் என்று எங்களில் யாருமே எதிர்பார்க்கவில்லை. கல்கத்தா இருட்டறைச் சம்பவம் என்று நீர் அடிக்கடி முன்னெல்லாம் பேசுவீரே, அதுபோன்ற சம்பவங்கள் ஆயிரக்கணக்கில் இங்கே நிகழக் கூடும். 'ஜாலியன்வாலா பாக்' ஆங்கிலேயன் ஒன்றே ஒன்றுதான் நடத்தினான். நீங்கள் நூற்றுக்கணக்கில் அதை நடத்திக் காட்டுவீர்கள். இன்னும், பெல்சன் காம்ப் தெரியுமா—ஐரோப்பாவில் செருமானியன் நடத்தினானே, அதுமாதிரிகூட நீங்கள் நடத்தத் துணிவீர்கள்! வீடுகளைச் சூறையாடுவீர்கள்! தொழில்களைப் பறிப்பீர்கள்! குடும்பங்களைச் சித்திரவதை செய்வீர்கள்—இன்னும் நாங்கள் எதிர்பார்க்காத எதை எதை எல்லாமோ செய்வீர்கள்!"

"சேச்சே! அவ்வளவு தூரம் நாங்கள் செய்யப்போவதில்லை. அவ்வளவுக்கு நீங்கள் — உம் அணியிலிருப்போர் தாக்குப் பிடிக்கமாட்டார்கள்! சும்மா ஒரு தடைச் சட்டம் என்றாலே, தொடை நடுங்கிக், கதிகலங்கி நிற்போர், அவ்வளவு பெரிய அடக்குமுறையை நினைத்துப் பார்க்கத்தான் முடியுமா? — நாளைக்கே பாரும், நாங்கள் மட்டும் சிறிதாகத் தடையொன்று போட்டுவிட்டால், உம் அணியிலிருப்போர் எத்தனை பேர் 'நானில்லை, நானில்லை' என்று கும்பிடு போட்டுக்கொண்டு ஓடுகிறார்கள் என்று; நீர் என்னவோ ஆட் பெருக்கத்தைக் காட்டுகின்றீர். பேரணி, பேரணி என்று வீண்பரணி பாடுகின்றீர்! உம் அணியிலுள்ள எல்லாரும் சுகவாசிகள். திண்ணை வம்பளப்பும், மேடை வம்பளப்பும் செய்கின்றவர்கள். அதனால்தான் அடக்குமுறையைவிட வேறொரு ஆயுதத்தை இன்று நான் பயன்படுத்தி வருகிறேன். அதுதான் ஒருவருக்கு ஒருவர் சிண்டு முடிந்துவிடும் வேலை. விருதுகளையும், புகழ் மாலைகளையும் காட்டிக் காட்டிக் கவர்ந்திழுக்கும் வேலை.

"அதோடு உங்கள் மீது தடைவிதித்து அடக்குமுறையை மேலும் அவிழ்த்துவிட நாங்கள் என்ன அறிவில்லாதவர்களா?—இன்று நாங்கள் தடைவிதித்தால் நாளைக்கே உங்களுக்கெல்லாம் பேர்வந்துவிடுமே—போராட்ட வீரர்கள், விடுதலை வீரர்கள் என்று பேர். பிறகு சும்மா கிடப்பவர்கள் எல்லாம், இன்று உங்களைத் திட்டித் தீர்ப்பவர்கள் எல்லாம் உண்மையாகவே உங்கள் பக்கம் வந்துநின்றுவிடுவார்களே! அதெல்லாம் எங்களுக்குத் தெரியாதா என்ன?—தடை இப்போதைக்குப் போடமாட்டோம்-நிலைமை கட்டுக்கு மீறுகிறவரை. ஆனால் உங்கள் அணியைச் சிதைப்பதற்கு, உங்கள் பேரே இல்லாமல் செய்வதற்கு, வேறு வகையில் என்னென்ன செய்யவேண்டுமோ, அவற்றையெல்லாம் நாங்கள் ஏற்கெனவே செய்யத் தொடங்கிவிட்டோம். இப்போது செய்துகொண்டிருக்கிறோம். பின்னால் நாங்கள் போடப்போகும் தடையை எதிர்பார்த்து நீங்கள் இப்போதே சித்தமாக நிற்பதைவிட, முடியுமானால், உங்களை அழித்தொழிப்பதற்கு இப்போது நாங்கள் செய்துகொண்டுவரும் வேறுவகை வேலைகளைக் கண்டுபிடிக்க முயலுங்கள்."

"நீர் சொல்வதை என்னால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. என்மீதும், என் அணியைச் சேர்ந்தார் மீதும் அவ்வளவு தூரம் நீர் அலட்சியப்போக்கினை ஏற்றி வைத்துக்கொண்டிருக்கிறீர்! அதே வேளை உம் சூழ்ச்சியாலும், நச்சுப் போக்காலும், மோசக் கருத்தாலும் எதையுமே சாதித்துவிடலாம், யாரையுமே வசப்படுத்திவிடலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறீர்!—ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளும்—உமக்கு வரலாறு தெரியாது — நான் சொல்வதைக் கேட்டாவது தெரிந்துகொள்ளும்! சூழ்ச்சி தன் இறுதிக் கட்டத்தை அடைந்து, வீழ்ந்து பொடியாகும் வரை வெற்றிப் போக்கில், ஏறுமுகமாகத்தான் போய்க்கொண்டிருக்கும். பொய்ம்மை தன் முடிவை நெருங்கி, இல்லாது ஒழியும்வரை உயர்வுத் தோற்றத்தைத்தான் காட்டிக்கொண்டு நிற்கும். உண்மையும் நேர்மையுமோ திடீரென்று விளக்கம் பெற்று உயர்வடையப் போகும் கடைசி நிலைவரை துவண்டுதான் காணப்படும். மதிப்புக் குறைந்த அளவில்தான் பலராலும் பேசப்பட்டு வரும். இந்த இரண்டு நிலைகளில்தான் இன்று நீரும், நானும் இருக்கின்றோம். யார் யார் எந்த நிலையைச் சார்ந்தவர்கள் என்று நீரே புரிந்துகொள்ளும்."

இவ்வளவில், கிழக்கின் வெளுப்பு மறைந்துகொண்டுவிட்டது. அங்கே செம்மை படர்ந்தது. ஏற்றான் தன் கடமையை எண்ணிக்கொண்டு ஏறுநடைபோட்டு நடந்தான். அவனிடம் எதிர்வாதமிட்ட மாற்றானே, அவன் விரைவுப் போக்கை வெறித்து நோக்கிக்கொண்டு நின்றான்.

★

**17—9—61-ல் வெளிவருகிறது!**

தி. மு. கழக அறிவுப் படைவரிசையின் அணிகலமாய்
திராவிடர் தம் நாட்டை திராவிடர்க்கு ஆக்க
செப்டம்பர் 17-ல் வருகிறது.

**"கலை மன்றம்"**

(கிழமை இதழ்)

ஆசிரியர்:- பால்வண்ணன்.

**விலை 20 காசு**

அழகிய மூவண்ண முகப்புடன் 20-பக்கங்கள் உடையது.
எங்கும் முன்பணம்கட்டும் ஏஜண்டுகள் தேவை.

**"கலை மன்றம்"**

12-ஸ்டேஷன்வியூரோடு, கோடம்பாக்கம்—சென்னை-24.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.




காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.